பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 15, புதன்கிழமை 30.11.2016 கதிர் 25

### விமானம் வீழ்ந்து நொருங்கியது



பிரேஸிலின் பிரபல உதை பந்தாட்ட அணி வீரர்கள் உட்பட 81 பயணிகளுடன் பறந்த விமானம் கொலம்பியாவில் வீழ்ந்து நொருங்கியமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

(முன் வந்த செய்தி 18ஆம் பக்கத்தில்)



# 2017 முற்பகுதியிலாவது புதிய அரசமைப்பு!

## சம்பந்தன் இப்போது நம்பிக்கை

திருகோணமலை, நவம்பர் 30

**புதிய அரசமைப்பை நிறைவேற்ற வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டு முற்பகுதியிலாவது அது நிறைவேற்றப்படக்கூடிய நிலைமை உள்ளது என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நம்பிக்கை தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் விசேட கூட்டம் இரா.சம்பந்தன் தலைமையில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

நாட்டின் பெரும்பான்மையினத் தலைவர்கள் மத்தியிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை உணரமுடிகிறது.

பக்கம் 19 >>>

## ஒற்றையாட்சியே! சமஷ்டி 'அவுட்'!!

*நல்லாட்சியின் 4ஆவது அமைச்சரும் அறிவிப்பு*

கொழும்பு, நவ.30

உத்தேச புதிய அரசமைப்பின் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்படும். சமஷ்டிக்கு இடமேயில்லை. ஆனால் சமஷ்டி வரப்போகின்றது என சிலர் பொய்யானபயத்தைநாட்டில்ஏற்படுத்தி இனவாத, மதவாத, அரசியலை நடத்த முனைகின்றனர். இவ்வாறானவர்களுக்கு

பக்கம் 20 >>>

## மஹிந்தவின் இல்லத்தில் புதிய கட்டடத்துக்கு 2 கோடி ரூபா

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஓய்வு பெற்ற முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கான உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த இல்லத்தில் புதிய கட்டடம் ஒன்றைநிர்மாணிப்பதற்காக

பக்கம் 20 >>>

## கருணா கைது!

கொழும்பு, நவ.30

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில்வாக்கு மூலம் ஒன்றைபெறுவதற்காக நிதி மோசடி தொடர்பான பொலிஸ் பிரிவுக்கு அழைக்கப்

பக்கம் 19 >>>



## புகைக்குண்டு வீசி தண்ணீர் பீய்ச்சி அடித்து பல்கலை மாணவர்கள் கலைக்கப்பட்டனர்!

*நாடாளுமன்றுக்கு பேரணியாகச் சென்ற சமயம் பொலிஸார் நடவடிக்கை*

கொழும்பு, நவ.30

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடக் கோரியும் இலவச கல்விக்கு முன்னுரிமை கொடுக்கக்கோரியும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவரகளால் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் கண்ணீப் புகை மற்றும் நீரத்தாரை பிரயோகத் தாக்குதல்களை மேற்கொண்டு மாணவர்களைக் கலைத்தனர்.

இந்த தாக்குதலில் ஏராளமான மாணவர்கள் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரியவருகின்றது.



மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடாச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அரசாங்கம் இதற்கு சாதகமான தீர்வை முன்வைக்கவில்லை.

இதனால் நாடாளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தப்போவதாக மாணவர்கள் எச்சரித்திருந்தனர். மாணவர்களின் கோரிக்கைக்கு பதிலளிக்காத அரசாங்கம் பொலிஸாரைக் கொண்டு இந்தப் போராட்டத்தை

பக்கம் 20 >>>

## நாரந்தனை தாக்குதல் சம்பவம்:
## தாக்கிய கூட்டத்தில் பொல்லுடன் மதனராஜாவும் நின்றிருந்தார்!

*சுரேஷ் பிறேமச்சந்திரன் சாட்சியம்*

"எங்களைத் தாக்கிய கூட்டத்தில் மதனராஜா பெரும் பொல்லுகளுடன் ஆக்ரோசமாக நின்றார். அவரை எனக்கு 15 வருடமாகத் தெரியும். அந்தக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியுடன் இருந்தவர். ஈ.பி.டி.பி கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதில் போய் இணைந்தவர்."

– இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் கூறினார். கடந்த 2001 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்துக்காக ஊர்காவற்றுறைக்குச் சென்று கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை நாரந்தனையில் வழிமறித்து தாக்குதல் நடத்திய வழக்கின் விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன. இந்த வழக்கில், சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணி தற்

பக்கம் 19 >>>

## புலமைப்பரிசில் பரீட்சையை இனி தரம்8 அல்லது 9இல் நடத்துங்கள்!

*சரவணபவன் எம்.பி. நேற்று சபையில் வலியுறுத்து*

கொழும்பு, நவ.30

"சிறாரை உளநெருக்கீடுகளுக்கு உட்படுத்தும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை தரம் 8இல் அல்லது 9இல் நடத்துங்கள்!"

–இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நேற்று நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மகளிர் சிறுவர் விவகார அமைச்சுக்கானநிதிஒதுக்கீட்டின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் இப்படிக் கோரினார்.

குழுநிலை விவாதத்தின் போது நேற்று அவர் கூறியவை வருமாறு:-

பக்கம் 19 >>>

### அளப்பு அருணாசலம்




அப்ப உவரும் பிள்ளையானும் தங்கட பழைய மக்கள் கட்சியை உள்ளுக்குள்ளேயே புனரமைக்கலாம் பாருங்கோ...!

## காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை:

# நீண்ட காலம் கடந்து விட்டதால் சட்ட நிவாரணம் பெறுவதில் சிக்கல்!

## ஆற்றுப்படுத்துகிறார் முன்னாள் நீதிபதி



யாழ்ப்பாணம்.நவ.30

யுத்த காலத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று தமது சோகக் கதைகளை கண்ணீர் மல்க எடுத்துரைத்ததை அடுத்து அவர்களை ஆற்றுப்படுத்தி, வழமை வாழ்வுக்கு திரும்புவதற்கான ஊக்கத்தை அளிக்கும் விதத்தில் உரைநிகழ்த்தினார் ஓய்வு பெற்ற நீதிபதியும், சைவ பரிபாலன சபையின் தலைவருமான இ.வசந்தசேனன்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் நேற்று யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸுக்கு அருகில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற உண்மையைக் கூறும் குழுமத்தின் செயலமர்வின் முடிவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி இ.வசந்தசேனன் கடத்தல் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளை ஆற்றுப்படுத்தும் விதத்தில் பின்வருமாறு கூறினார்:-

இத்தகைய சம்பவங்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்திருந்தால் இப் பிரச்சினையை ஆள்கொணர்வு மனு மூலம் சட்ட ரீதியாக அணுகலாம்.

ஆனால், இப்பிரச்சினையானது, 9,10 வருடங்களைக் கடந்து விட்டது. அதனால் அப்படி சட்ட ரீதியான நிவாரணத்தைப் பெறுவது உடனடிச் சாத்தியம் இல்லை. அதற்கு நீண்ட காலம் பிடிக்கலாம். அதனைப் பாதிக்கப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் நீங்கள் இங்கே ஏதோ ஒரு நம்பிக்கையில்தான் வந்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதுமட்டுமன்றி இங்கு தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்த அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களும் இனியொரு யுத்தம் வேண்டாம் என்றே கூறுகின்றனர். இங்கு முறைப்பாடுகளைப் பதிவு செய்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ், மற்றும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையுடன் வாழ விரும்புவதுடன் யுத்தத்தையும் வெறுக்கிறார்கள்.

காணாமல் போனோர் காணாமல் ஆக்கப்பட்டோரை நினைத்து வருத்தப்படுவதை தவிருங்கள். எனக்குத் தெரியும் உங்களது நிலைமை. ஆனால் எவ்வளவு காலத்திற்கு அப்படியே இருப்பீர்கள்? உங்களது மற்றும் உங்கள் குடும்பங்களின் எதிர்காலத்தை கவனிக்க வேண்டும். அதுவே உங்களது வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும்.

நீங்கள் பொருளாதார ரீதியில் வளரவேண்டும். அதற்கு எம்மால் உதவி செய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகளை நாம் நிச்சயம் செய்வோம். அரசாங்கத்துடனும் முறைப்படி அது தொடர்பாக அணுகி உங்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். - என்றார். (உ-10)

### வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து

## அரச வைத்தியர்கள் இன்று முழுநாளும் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம்

வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்தியர்கள் இன்று காலை 8.00 மணி முதல் நாடளாவிய ரீதியில் 24 மணித்தியால அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வாய்ப்புள்ளதாகவும் அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமந்த ஆனந்த குறிப்பிட்டுள்ளார்.

எனினும், புற்றுநோய் வைத்தியசாலை, சிறுநீரக பிரிவு, ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை, டி சொய்சா பெண்கள் வைத்திய சாலை போன்ற சில வைத்திய சாலைகள் இயங்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பாதகமான விடயங்கள் சிலவற்றுக்கு தாம் எதிர்ப்பு வெளியிட்டனர் எனச் சுட்டிக் காட்டிய சமந்த ஆனந்த, அது தொடர்பில் உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதனாலேயே வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தாங்கள் தீர்மானித்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ஞானசார தேரரின் விடுதலைக்கு எதிரான மனு மீது விசாரணை

### மேன்முறையீட்டு நீதிமன்றில் ஜன.20 இல் நடக்கும்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினரின் விடுதலைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்பது என மேன்முறையீட்டு நீதிமன்று அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணை இடம்பெறும் எனவும் நீதிமன்று தெரிவித்துள்ளது.

தேவாலயம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு ஞானசாரதேரர் உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குடன் தொடர்புடைய 13 பேரையும் கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி அதனை விசாரணைக்கு எடுப்பது எனத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இந்த வழக்கின் பிரதிவாதியான ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமையால் அவரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறு அரச தரப்பில் இருந்து கோரப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிமன்றம் இது பற்றிய முடிவை ஜனவரி 20ஆம் திகதி அறிவிப்பது எனவும் தெரிவித்தது. (ம)

### மத வெறுப்புக் கருத்துக்களை வெளியிட்ட

## அப்துல் ராசிக்கிற்கு பிணை மறுப்பு; டிசெம்பர் 9 வரை விளக்கமறியல்

மத ரீதியான பேதங்களைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார் எனக் கூறி கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலாளர் அப்துல் ராசிக்குக்கு பிணை வழங்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மறுத்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை பிரதிவாதி தரப்பில் பிணை கோரப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதால் சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

இதனையடுத்து முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த நீதிமன்றம் அப்துல் ராசிக்கை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்தது. (ம)

## கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரல்

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கலாசாரப் பேரவை 2016 ஆம் ஆண்டிற்கான பிரதேச மலரான 'கலைநிலம்' என்ற நூலை வெளியிடவுள்ளது. இந்த நூலுக்கு எழுத்தாளர்கள், கலைஞர்களிடம் இருந்து தகுதிவாய்ந்த ஆக்கங்கள் எதிர்பார்க்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆக்கங்களினை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும் என பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் அறிவித்துள்ளார். (ம-54)

## விபத்தில் காயமடைந்த ஆசிரியை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

மன்னார் முருங்கன் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆசிரியை ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உயிரிழந்தார்.

மன்னார் முருங்கனைச் சேர்ந்த மகேஸ்வரன் சோதிமலர் (வயது55) என்ற ஆசிரியையே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று காலை மேற்படி ஆசிரியை வீட்டில் இருந்து வெளியே சென்று கொண்டிருந்த போது, பிரதான வீதியில் வைத்து வான் ஒன்று மோதித்தள்ளியது. இதில் படுகாயமடைந்த அவர், முருங்கன் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று மாலை உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம -9)

## பாடசாலைச் சுற்றாடலில் சீருடை விற்பனைக்குத் தடை

பாடசாலையை அண்மித்த இடங்களில்சீருடைகளை விற்பனை செய்யும் நோக்கில் அவற்றைக் கொண்டுசெல்ல எவருக்கும் அனுமதி இல்லை என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேபோல் அதிபர்களும் , அரச கல்வி அதிகாரிகளும் சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கு மாணவர்களுக்கு வர்த்தக நிலையங்களைப் பரிந்துரை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் மாணவர்களின் சீருடை விநியோகத்தில் தலையிட முடியாது என்பதுடன் சீருடைக்கான வவுச்சர்களை மாணவர்களின் கைகளிலேயே கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் குறித்த வவுச்சரை எந்த ஒரு வர்த்தக நிலையத்திலும் கொடுத்து பாடசாலை சீருடைகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையருக்கு ஜனவரி முதல் ஓய்வூதியத்திட்டம் நடைமுறைக்கு!

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

பயிற்றப்பட்டவர்களை வெளிநாடுகளுக்குத் தொழிலுக்கு அனுப்பும் வேலைத் திட்டத்தையும் ஆரம்பிக்கவிருக்கின்றோம்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பங்களிப்பு முறையிலான இந்த ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்களிடம் இருந்து 2வருடங்களுக்கு 50ஆயிரம் ரூபா பங்களிப்பாகப் பெற்றுக்கொள்ளப்படும். - என்றார்.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று தம் அனுபவங்களை கண்ணீர் மல்க விவரிப்பு

## யாழ்.நகரில் இடம்பெற்ற உணர்வுபூர்வ நிகழ்வு

யுத்த காலகட்டத்தில் படையினராலும் ஆயுததாரிகளினாலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது சோகக்கதைகளை கண்ணீர் மல்க நேற்று எடுத்துரைத்தனர்.

இலங்கைத் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் மாவட்டங்களின் சர்வமதக் குழுக்களின் ஏற்பாட்டில் உண்மையைக் கூறும் குழுமம், செயலமர்வு ஒன்றை நேற்று செய்வாய்க்கிழமை யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் நடத்தியது. இச்செயலமர்வின் போதே பாதிக்கப்பட்டோர் தமது அனுப வத்தை இவ்வாறு கண்ணீர் மல்கத் தெரிவித்திருந்தனர்.

ஓய்வுபெற்றமேல்நீதிமன்ற நீதிபதி இ.வசந்தசேனன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன், யாழ்.மாவட்ட சர்வமதத் தலைவர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார், உளவளத்துறைவைத்தியர்சிவசங்கர், யாழ்.பல்லைக்கழகத்தின் அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. ஜி.தில்லைநாதன், மன்னார் மாவட்ட சர்வமதக் குழுவின் தலைவர் சிவஸ்ரீ தர்மகுமார குருக்கள் ஆகியோர் பிரதான மேசைகளில் அமர்ந்து பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டனர்.

யுத்த காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தவையாவன:-


### மடு இளம்பெண்ணின் சோகக்கதை

''வெள்ளை வானில் கடத்தப்பட்ட என் கணவனை இரண்டு தடவைகள் இராணுவத்துடன் கண்டேன்.''

மடுவைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண்ணான ஜே.நர்மிலா தமது நிலைமையை இவ்வாறு வெளிப்படுத்தினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எனது கணவனான ஜெயகாந்தனை 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் வெள்ளை வானில் என் வீட்டிற்கு வந்த இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். அப்பொழுது நாங்கள் திருமணம் செய்து 4 வருடங்களில் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்தோம்.

கணவனைக் கொண்டு சென்றதிலிருந்து இதுவரை அவர் தொடர்பான எதுவித தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக நாம் ஊரெழு இராணுவ முகாம், கோப்பாய் பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்று முறைப்பாடுகளைச் செய்தோம். இருந்த போதிலும் அவர்கள் எமக்கு எந்தவித பதிலையும் தரவில்லை. அத்துடன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. - என்றார்.



தொகுப்பு: அ.றொக்சன்

### புத்தளம் பெண் சமீனாவின் அனுபவம்

''வாழைச்சேனை கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்களினால் என் கணவர் இழுத்துச் செல்லப்பட்டார்''.

இவ்வாறு மன்னார் புத்தளம் வீதியைச் சேர்ந்த பாத்திமா சமீனா என்பவர் தெரிவித்தார்.

எனது கணவர் வாழைச்சேனையில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரினால் இழுத்துச் செல்லப்பட்டார். சம்பவம் நடைபெற்ற அன் றைய தினம் கணவனுடைய வாகனத்தில் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒருவரும், மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவருமாக இருவர் கூடச் சென்றனர். நீர் கொழும்பைச் சேர்ந்த நபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.



இவர் புத்தளம் வந்த பின்னர் நான் பொலிஸில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய விசாரிக்கப்பட்டார். இதன் போது தன்னையும் சேர்த்து இனந்தெரியாதோர் கடத்திச் சென்றனர் எனவும், தான் ஒரு சிறுநீரகத்துடன் வாழ்வதால் விடுவிக்குமாறுகோரி அழுதமையை அடுத்து அவர்கள் தன்னை விடுவித்தனர் எனவும் கூறினார். அத்தோடு கடத்திச் சென்றவர்கள் யார் என்பது தமக்குத் தெரியாது என்று சொன்னார். - இப்படி சமீனா குறிப்பிட்டார்.

### புத்தளம்வாசியின் சாட்சியம்

''யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் 2009 பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி காலை 10 மணியளவில் எனது தந்தை எழுவன்குளம் வீட்டிலிருந்து 4ஆம் கட்டை ஆலைக்கு நெல் அரைக்கச் சென்றபோது அவருடன் தற்காலிகமாக உள்ள சாரதிக்குப் பதிலாக மற்றும் இரண்டு உதவியாளர்களும் லொறியில் இருந்துள்ளனர்.

''வெள்ளை வானில் ஆயுதங்களுடன் வந்த 6பேர், 4ஆம் கட்டை பாலத்தின் மேல் லொறியை நிறுத்தி அப்பாவையும் தற்காலிக சாரதியான மொஹமத்தையும் பிடித்துச் சென்றுள்ளனர். உதவியாளர்கள் இருவரிடமும் அதற்காக வாக்கு மூலம் பெற வேண்டும். அழைத்துச் செல்கிறோம், யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கூறி புத்தளம் பக்கமாக அந்த வெள்ளை வான் சென்றது.- என்றார் புத்தளத்தைச் சேர்ந்த பிரசாத் புத்திக விஜேகோன்.

### அம்பாறை யுவதியின் அனுபவம் இது

''மூன்று ஆயுததாரிகள் அப்பாவை அழைத்துக் கொண்டு மடு வீதிப்பக்கம் சென்றனர். 30 நிமிடங்களின் பின்னர் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது...''

மடு பூமலந்தானைச் சேர்ந்த கே.எச்.பிரியந்தி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதியன்று மடு வீதியில் அமைந்துள்ள எனது வீட்டில் நான், எனது அப்பா மற்றும் சகோதரர்கள் வசித்து வந்தவேளையில் இரவு 8.30 மணியளவில் எனது வீட்டிற்கு வந்த 3 ஆயுததாரிகள் எனது அப்பாவை வெளியே வருமாறு மிரட்டி அழைத்தனர்.

அவர் வெளியே வராத காரணத்தினால் என்னுடைய நெஞ்சில் துப்பாக்கியை வைத்து சுடப்போவதாக மிரட்டினர். இதனைப் பார்த்த எனது தந்தை வெளியே வர, அவரை அழைத்துக் கொண்டு மடு வீதிப்பக்கம் சென்றனர். 30 நிமிடம் கழித்து துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. பிறகு தந்தை வீடு திரும்பவேயில்லை- என்றார்.

### சித்திரவதையால் அங்கவீனம்

''சித்திரவதைகளை அனுபவித்ததால் ஒரு கால் இயங்காமலும் ஒரு கண் பார்வை இழந்தும் என் கணவர் வாழ்ந்து வருகிறார்''

- இவ்வாறு கொடிகாமம் அல்லாரை வடக்கைச் சேர்ந்த மைக்கல் கொலின்ஸின் நிலை குறித்து அவரது மனைவி தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது 2007ஆம் ஆண்டு என்னுடைய கணவர் சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். அத்தோடு அவர் உடனடியாக சித்திரவதை முகாமான பூசாவிற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் 6 மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டு பல்வேறுபட்ட துயரங்களையும் அனுபவித்தார்.



அதன் பின்னர் என் கணவனை 4ஆம் மாடிக்கு அழைத்துச் சென்று அங்கு 2 மாத காலம் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தினர்.

அங்கு இடம்பெற்ற விசாரணைகளின் பின்னர் வெலிக்கடைச் சிறையில் 1 வருடமும் மற்றும் புனர்வாழ்வு முகாமில் 2 வருடங்களும் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டார். - என்றார்.

### ஐந்து சந்தி இளைஞனுக்கு ஏற்பட்ட கதி

''வியாபாரத்திற்குச் சென்ற கணவர் காணாமல் ஆக்கப்பட்டார்.'' - இவ்வாறு யாழ் ஐந்து சந்தி இளைஞர் ஒருவர் குறித்து அவரது மனைவி தெரிவித்தார்.

கடந்த 1990ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி வியாபாரத்திற்கு சென்ற வேளை என்னுடைய கணவர் தாண்டிக்குளம் பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார். நாம் அன்றைய காலகட்டத்தில் எமக்குத் தெரிந்த இடமெல்லாம் சென்று தேடினோம். அவர் தொடர்பான தகவல்களை எமக்குத்தெரிந்தவர்களிடம் விசாரித்தோம். அவர் தொடர்பான எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. பொலிஸ் நிலையத்திலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் எமது முறைப்பாட்டைப்பதிவு செய்தோம். இருந்தும் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படவில்லை. - என யாழ்.ஐந்து சந்தி பொம்மை வெளியைச் சேர்ந்த மஜித் றஜீவ் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.



### கணவனையும் மகனையும் இளந்த பெண்ணின் நிலை

''ஷெல் தாக்குதலில் கணவனை இழந்தேன். கடைக்குச் சென்ற மகன் காணாமல் ஆக்கப்பட்டார்'' - இவ்வாறு மன்னாரைச் சேர்ந்த பெண் ஒருவர் தன் நிலைமையை விவரித்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களோடு மக்களாக வசித்து வந்த வேளையில் என் வீட்டின் மேல் வந்து விழுந்த 'ஷெல் குண்டொன்றினால் எனது கணவனை அந்த இடத்திலேயே பறிகொடுத்தேன். தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதி மீன் வாங்குவதற்கு வெளியிலே சென்ற வேளை என் மகன் இடையிலே காணாமல் ஆக்கப்ப்ட்டான்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட என் மகனை நான் தேடி அலைந்தபோது ஓமந்தைச் சாவடியில் இலங்கை இராணுவத்தினர் தடுத்து வைத்திருந்தமையை தாம் நேரடியாகக் கண்டனர் எனப் பலர் என்னிடம் தெரிவித்தனர். இன்று வரையில் என் மகனுக்கு என்ன நடந்தது என்று அறியாமல் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளோடு சேர்ந்து நானும் என் மகனைத் தேடி வருகிறேன். - என்று மன்னார் பள்ளமடுவைச் சேர்ந்த சின்னையா நாகேஸ்வரி ஏக்கத்துடன் கூறினார். (19 ஆம் பக்கம் பார்க்க...)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600


## ஊடகசுதந்திரமும் 'மிஸ்டர் பரிசுத்தமு'ம்

ஊடகங்கள், அவற்றின் போக்கு ஆகியவை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு கருத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றார்.

*"ஊடகங்கள் என்னைத் தாக்கினால் நானும் திருப்பித் தாக்குவேன். ஆனால், எனது அந்தத் தாக்குதல் பகிரங்கப் பேச்சு மாத்திரமே"* - என்று அவர் கூறியிருக்கின்றார்.

அது முற்றிலும் சரியான நிலைப்பாடுதான். அதை மறுப்பது - அல்லது தவறு என்றுரைப்பது - அல்லது அத்தகைய கருத்து நிலைப்பாட்டை ஊடக அடக்குமுறையாக அர்த்தப்படுத்துவது - தவறானது.

ஏனென்றால் பிரதமர் அப்படிக் கூறுவதே கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் அடிப்படையில் எழுந்ததுதான். அந்தக் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைத்தான் நாம் - ஊடகத்துறையினர் - வலியுறுத்தி நிற்கின்றோம்.

சமூகப் பிரதிநிதிகளையும் அரசியல்வாதிகளையும் - அவர்களின் செயற்பாடுகளையும் - போக்கையும் - ஊடகங்கள் விமர்சிக்கலாம் என்றால், ஊடகங்களின் செயற்போக்கை - அவர்கள் தவறு என்று கருதும் விடயங்களை - சட்டத்துக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் உட்பட்டு அவர்கள் விமர்சிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? ஊடகங்களின் செயற்போக்குத் தொடர்பாக அத்தகையோர் நீதிமன்றங்களுக்கும் பொலிஸ"க்கும் செல்லாமல், திரும்பி கருத்துச் சுதந்திரத்தின் கீழ் - தமக்குரிய வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் கீழ் - வெறும் வாய்ப்பேச்சு பதிலையோ அல்லது எழுத்துமூல அறிக்கையையோ நாடுவது மேன்மையானது தானே! அதைத் தவறு என்று சொல்ல முடியாது.

ஆனால், இந்த விடயத்துக்கும் அப்பால்சென்று பிரதமர் கூறும் ஓர் அம்சமே விமர்சனத்துக்குரியதாக இருக்கின்றது.

*"ஊடக நிலையங்களுக்குத் தீ வைப்பது, ஊடகவியலாளர்களைக் கடத்துவது போன்ற விடயங்கள் எனக்கோ, ஜனாதிபதிக்கோ அவசியமில்லாதவை. நாம் ஆட்களைக் கடத்தவோ, தீ வைக்கவோ முயற்சிக்கவில்லை."* - என்று பிரதமர் தனக்கும், ஜனாதிபதிக்கும், தமது அரசுக்கும் புகழாரம் சூட்டுவதில்தான் ஒரு சிக்கல் இருப்பதாகக் கருதவேண்டி உள்ளது.

நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த உங்களால் - நீங்கள் விரும்பினால்கூட அத்தகைய ஊடக அத்துமீறலைச் செய்யமுடியாது. பல கட்சிகளை இணைத்து ஒட்டுப்போட்டு ஆட்சியைக் கொண்டுநடத்தும் உங்களால் அப்படி ஓர் 'இரும்புப்பிடி' நிர்வாகத்தை நடத்த முடியாது. நடத்த முயன்றால், வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் உங்கள் அரசு தூக்கி வீசப்படுவதற்கு மிகவும் நீண்டகாலம் பிடிக்காது.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் அவரிடமிருந்த ஆட்சி அதிகாரப்பிடி வேறு. இப்போது நீங்கள் நடத்தும் ஆட்சி அதிகாரத்துக்கான களமும், சூழலும், புறநிலையும் வேறு.

அந்தப் பாணியில் மஹிந்த ராஜபக்ஷ அரசால் பத்து ஆண்டுகள் நீடிக்க முடிந்தது. அதே பாணியை இப்போது நீங்கள் பின்பற்ற முயன்றால், பத்து மாதத்துக்கு முன்னரே கதை கந்தலாகிவிடும்.

ஆகவே, நீங்கள் முன்னைய ஆட்சி அதிகாரத்தைப்போல செயற்படவில்லை என்று கூறுவதற்கு முதல், அப்படிச் செய்வதற்கு இன்றைய சூழலில் உங்களிடம் இயலுமை உள்ளதா என்பதை முதலில் உரைத்துப்பாருங்கள். 1995 வரை தொடர்ந்த உங்களின் முன்னைய ஐ.தே.கட்சியின் ஆட்சியில் தங்களின் பியகம தொகுதியில் இருந்த பட்டலந்தை வதை முகாம் பற்றிய அப்போதைய செய்திகள் இப்போது மறக்கப்பட்டவையாக இருந்தாலும், அதிகாரத்திலுள்ள வேளையில் நீங்களும் எல்லாம் செய்ய வல்லமை கொண்டவரே என்பதும், 2001 இல் நீங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தபோதே அந்த நிலைப்பாட்டில் இருந்து உங்களை மாற்றிக்கொண்டு 'மிஸ்டர் பரிசுத்தம்' என்று காட்டிக் கொள்ள முயல்கின்றீர்கள் என்பதும் நமக்குத் தெரிந்தவையே.

மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தால் உங்களின் 'மிஸ்டர் பரிசுத்தம்' என்ற 'இமேஜில்' ஒரு கீறல் விழுந்திருப்பதும் வாஸ்தவம்தான். எம்மைப் பொறுத்தவரை அந்த 'மிஸ்டர் பரிசுத்தம்' என்ற பெயரை நீங்கள் தக்கவைப்பதாயின் ஒன்றைப் புரிந்தாகவேண்டும்.

செய்தல், செய்யாமை - புரிதல், புரியாமை (Commission and Omission) என்ற இரண்டு விடயங்கள் உள்ளன.

ஊடக சுதந்திரத்தை வன்முறையால் அடக்கும் மீறல்களை நீங்கள் இழைக்காமல் இருக்கலாம். அதாவது, புரிதல் என்ற தவறை நீங்கள் செய்யாமல் இருக்கலாம்.

ஆனால், ஊடக சுதந்திர விடயத்தில் நீங்கள் புரியாமை என்ற தவறை இழைத்துக்கொண்டே இருக்கின்றீர்கள்.

நீங்கள் பிரதமராகி, அதிகாரத்துக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால், முன்னைய ஆட்சிக் காலத்தில் ஊடகங்களுக்கு எதிராகக் கொடூரமாக இழைக்கப்பட்ட அடாவடித்தனங்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்கொண்டு வருவதில் மெத்தனமாகச் செயற்படுகின்றீர்கள் அல்லது பக்கச்சார்பாகவும், பாராமுகமாகவும் செயற்படுகின்றீர்கள்.

அதைத்தான் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவனும் நாடாளுமன்றத்தில் விலாவாரியாக விவரித்திருக்கின்றார்.

ஊடக சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் தமக்கு உண்மையாகப் பற்றுறுதியும் திட சங்கற்பமும் இருக்கும் என்று பிரதமர் கருதினால், 'செய்யாமை' என்ற தவறிழைத்தலில் இருந்து தம்மைத் திருத்தி, ஊடக அடக்கு முறைக்குக் காரணமான சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் விரைந்து கொண்டு வரவேண்டும்.

அதுவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் விசனத்துடன் சுட்டிக்காட்டியமைபோல, தமிழ் ஊடகவியலாளர் மீதான தாக்குதல் பின்புலத்தில் மட்டும் பாராமுகம் காட்டும் தன் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும். பிரதமர் அதனைச் செயற்படுத்துவாரா?

# பெருந்தோட்ட மறு சீரமைப்பினால் தோட்ட மக்களுக்குப் பாதிப்பில்லை

## தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பி. தெரிவிப்பு

கண்டி, நவ.30

அரச பெருந்தோட்டங்களின் மறுசீரமைப்பில், தோட்ட மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசால் நிர்வகிக்கப்படுகின்ற மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டம் ஆகிய நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டத்திலே இயங்கி வருகின்றன. இதனால், அங்கு வாழுகின்ற தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையை மாற்றி அமைப்பதற்காக, அரச பெருந்தோட்டங்களை மறுசீரமைக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அரச முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசீமுடன், திங்கட்கிழமை விரிவான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோகணேசன், பிரதித் தலைவர் அமைச்சர் பழனி திகாம்பரம் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். 1992ஆம் ஆண்டில் இருந்து இத்தோட்டங்களில் வாழுகின்ற மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள், அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு விளக்கப்பட்டன. குறிப்பாக இத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைக்காலக் கொடுப்பனவு நிலுவைகள் பற்றியும் கூறப்பட்டன.

அதுமட்டுமன்றி, அந்தத் தோட்டங்களில் வாழுகின்ற சகலருக்கும் தனி வீடுகளை அமைப்பதற்கான காணித் துண்டுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலமாவது வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் கபீர் ஹாசீம், அரச பெருந் தோட்டங்களின் மறு சீரமைப்பில், அந்தத் தோட்டங்களில் வாழுகின்ற மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தார்.- என்றுள்ளது. (எ)

# பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம் தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

கொழும்பு, நவ.30

வெலிக்கடை பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் சாந்தன கலங்கசூரிய நேற்று நிராகரித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் செயற்பாட்டுக்குழுவும் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து, தடை உத்தரவைப் பெற்றுத் தருமாறு கேட்கப்பட்ட கோரிக்கையே இவ்வாறு நிராகரித்துள்ளார்.

அத்துடன் பொலிஸாருக்குத் தேவையான அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் செயற்பாட்டுக் குழுவும் இணைந்து நாடாளுமன்றத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போகின்றன என புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்திருந்தது. அதை அடுத்து இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறே பொலிஸார் நீதிமன்றத்தில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ)

# அரச வைத்திய அதிகாரிகள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு, நவ.30

நாடுதழுவிய ரீதியில் இன்று புதன்கிழமை காலை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தப் போராட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வாய்ப்புள்ளதாக, அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமந்த ஆனந்த குறிப்பிட்டுள்ளார். புற்றுநோய் வைத்தியசாலை, சிறு நீரகப் பிரிவு, ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை, டி சொய்சா பெண்கள் வைத்தியசாலை போன்ற சில வைத்தியசாலைகள் இயங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை வரவு -செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பாதகமான விடயங்கள் சிலவற்றுக்குத் தாம் எதிர்ப்பு வெளியிட்டதாக சுட்டிக்காட்டிய சமந்த ஆனந்த, அது தொடர்பில் உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். எனவே, இவ்வாறு வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தாம் தீர்மானித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படமாட்டாது!

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, நவ.30

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படாது என்று உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்குத் தமக்கு எவ்வித அவசியமும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ள அவர் எல்லை நிர்ணயம் தொடர்பிலான பிரச்சினை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்க நேரிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயம் தொடர்பான சர்ச்சைகளுக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னர் தேர்தல் நடத்தப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## நாளை

01.12.2016
வியாழக்கிழமை
திதி : துதியை முன்னிரவு 9.35 வரை
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு. 4.55 வரை
சுபநேரம் 7.44 - 9.14
இராகுகாலம் 1.44 - 3.14 வரை


JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)


உடலியலில் மாற்றமுண்டேனும் பெண்கள் வலுவிழந்தவர்கள் அல்லர்... வேற்றுமையை ஒழிப்போம். ஒன்றுபட்டு வாழ்வோம்.

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# உத்தேச அரசமைப்புக்கு எதிராக ராவண பலய ஆர்ப்பாட்டம்!

## மாவீரர்நாள் நிகழ்வை அடுத்து சந்தாதிஸ்ஸ தேரர் கொதிப்பு



வடக்கில் மாவீரர் தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் , பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் எவ்விதமாக அமையப் போகின்றன என கேள்வி எழுப்பியுள்ளார் ராவண பலய.

நாட்டைத்துண்டாடும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நல்லாட்சி அரசின் உத்தேச புதிய அரசமைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ராவண பலயவின் செய்தியாளர் மாநாட்டில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதன் போது உரையாற்றிய இத்தேகந்தே சந்தாதிஸ்ஸ தேரர் கூறுகையில்:

வடக்கில் இடம் பெறும் சம்பவங்கள் தொடர்பில் அரசு மௌனிக்கின்ற நிலையில்,தென்னிலங்கையில் சிறிய சம்பவம் என்றாலும் கைதுகள் இடம் பெறுகின்றன. வடக்கில் 270 இற்கும் மேற்பட்ட பௌத்த விகாரைகள் காணப்படுகின்றன. அதனை விக்னேஸ்வரன் அறியாமலிருக்க வாய்ப்பில்லை. அவற்றை மறு சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கில் காணப்படும் விகாரைகள் தொடர்பில் கண்காணித்து அவற்றை மறு சீரமைத்து விகாராதிபதிகளை அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு செய்யவிடின் தொல்பொருள் ஆராய்ச்சிதிணைக்களத்தினால் அவை ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டு அழிக்கப்படலாம்.

மேலும், மாவீரர் அனுஷ்டிப்புகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டினையே அரசு முன்னெடுத்து வருகின்றது.

எனவே, நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக அனைவரும் முன்வரவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

# கண்டி நீதிபதி மேனகாவை கொலை செய்யச் சூழ்ச்சி

## தடுப்புக் கைதி ஒருவர் தகவல்; பொலிஸார் துரித நடவடிக்கை

கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசூரியவை கொலை செய்ய சூழ்ச்சித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பல்லேகலே பலகொல்ல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தும்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் இந்தக் கொலை முயற்சி பற்றிய சூழ்ச்சித் திட்டத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மஹர சிறைச்சாலையில் பணியாற்றி வரும் சிறைச்சாலை அதிகாரி ஒருவரால் தமக்கு இந்த விடயம் கூறப்பட்டது என்று அந்தக் கைதி தெரிவித்துள்ளார்.

தும்பர சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி இது குறித்து எழுத்து மூலம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பலகொல்ல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தும்பர சிறைச்சாலையின் அதிகாரிகள் மற்றும் கைதிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் கொலை முயற்சி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## கம்போடிய பிரதமரின் இலங்கை விஜயம் ரத்து

கம்போடிய பிரதமர் ஹூன் சென் பாகிஸ்தான் மற்றும் இலங்கை உள்ளிட்ட நான்கு நாடுகளுக்கான தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார்.

பாகிஸ்தான் செனட் தலைவரான மியான் ராசா ரப்பானியுடனான கலந்துரையாடலை அடுத்தே, ஹூன் சென் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று, அந்த நாட்டு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எப்போது வேண்டுமெனிலும் விஜயம் செய்யலாம் என, மியான் ராசா ரப்பானி கம்போடிய பிரதமருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதன் அடிப்படையில், கம்போடியப் பிரதமர் பாகிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில், தனது நாட்டில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நிறைய இருப்பதால், பாகிஸ்தான் உள்ளிட்ட நான்கு நாடுகளுக்கான தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார் என்றும் இதற்காக வருந்துகிறேன் எனவும் காம்போடியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

கொழும்பு,நவ.30

நல்லாட்சி அரசு அமைச்சரவை மாற்றம் ஒன்று குறித்துச் சிந்திப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அமைச்சர்களின் இருபது மாத கால பெறுபேறுகள், சாதனைகள் குறித்து மதிப்பிட்டு அவற்றின் அடிப்படையில் ஜனவரியில் அமைச்சரவை மாற்றம் ஒன்றை செய்வது குறித்து நல்லாட்சிஅரசின் தலைவர்களான ஜனாதிபதியும், பிரதமரும் முடிவு செய்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றாலும் இந்தக்கூட்டுஅரசாங்கத்தில் ஐ.தே. கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய தரப்புகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையில் மாற் றம் ஏதும் செய்யப்பட்ட மாட்டாது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நல்லாட்சி அரசைப் பலப்படுத்துவது தொடர்பில் அந்த அரசின் தலைவர்களான ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பல விடயங்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அப்போதே எதிர்பார்ப்புக்குக் குறைவான பெறுபேறுகளைக் காட்டும் அமைச்சர்களை மாற்றியமைப்பது குறித்துத் தீர்மானிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு உழைத்த சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு கடந்த மாதம் ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி இரவு விருந்தளித்து கௌரவித்தார். அச்சமயம் உரிய பெறுபேறுகளைத் தராத அமைச்சர்களை மாற்றி அமைப்பது தொடர்பான ஓர் எழுத்து மூலமான கோரிக்கையை சிவில் சமூக பிரதிநிதிகள் ஜனாதிப தியிடம் கையளித்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

(உ)

## சோளச்செய்கை பெருவீழ்ச்சி

மட்டக்களப்பு மாவட்டத் தில் காட்டு யானைகளின் அட்ட காசத்தால் கடந்த வருடங்களை விட இம்முறை சோளச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் சிறுபோகம் மற்றும் பெரும் போகம் என 4ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்த வருடம் 3ஆயிரத்து 850 ஏக் கரிலேயே செய்யப்பட்டுள் ளது.

யானைகள் ஊடுருவும் பகுதிகளில் இம்முறை சோளச் செய்கை கைவிடப்பட் டுள்ளது என்றார் விவசாயப் பிரதிப் பணிப்பாளர். (ச)

## தென்கிழக்கு பல்கலையில் டிசே.5 முதல் தொழில் நுட்பப்பீட கற்கைநெறி

அம்பாறை, நவ.30

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் எதிர் வரும் டிசெம்பர் 5ஆம் திகதி முதல் தொழில் நுட்பப் பீடத்துக்கான கற்கை நெறி ஆரம்பமாகும் என்று பல்கலைக் கழக துணை வேந்தர் எம்.எம்.எம்.நாஜிம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இது தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 6ஆவது கற்கை நெறிப் பீடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு முதற் கட்டமாக 160 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

தொழில்நுட்பப் பீடத்துடன் விவசாய தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொடர் பாடல் தொழில் நுட்பக் கற்கை நெறிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தகவல் தொடர்பாடல் கற்கைநெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 75 மாண வர்கள் பரிந்துரை செய்யப் பட்டுள்ளனர். -என்றார். (இ-ச)

## யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,நவ.30

மண்டூர் வெட்டை ஊத்துச்சேனைக் கிராமத்தில் காட்டு யானை தாக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

6 பிள்ளைகளின் தந்தையான சடாச்சரம் நமசிவாயம் (வயது-60) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வயலுக்குச் செல்லும் காட்டு வழிப்பாதையில் வைத்தே குறித்த நபர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ச)

# நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஐ.தே.க., சு.க உறுப்பினர்கள் அதிருப்தி

கொழும்பு,நவ.30

வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் நாட்டின் ஸ்திர நிலை தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அரசில் இணைந்துள்ள பல ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியிலேயே காணப்படுகின்றனர்.

தீர்க்கமான உறுதியான மாற்று வழி இல்லாததால் இணைந்திருக்கின்றனர் என்றும் இந்த உறுப்பினர்கள் தமக்கு நன்மையளிக்கக் கூடிய சிறந்த மாற்று வழி குறித்து சிந்தித்து வருகின்றனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. கூட்டு எதிர்க்கட்சியும் உறுதியான ஒரு வழியை இந்த உறுப்பினர்களுக்கு வழங்காமல் பின்வாங்கி வருகிறது என்றும் கூறப்படுகிறது.

தமது நிலையை ஓரளவு தக்க வைத்துக் கொள்வதற்கு அரசில் இணைந்துள்ள இந்த உறுப்பினர்கள் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கின்றனர். உண்மையில் ஆட்சியை முன்கொண்டு யார் செல்கின்றனர் என்பது பலருக்கும் புரியாத புதிராக உள்ளது. பலர் தமக்கு விரும்பிய வகையில் கருத்துக்களையும் கூற்றுக்களையும் வெளியிட்டு வருகின்றனர். அந்தக் கூற்றுக்கள் சற்று சர்ச்சையானவுடன் ஊடக அடக்குமுறையைக் கொண்டு வந்து அதனை முடக்கி விடுகின்றனர்.

கடந்த அரசைக் கடுமையாக விமர்சித்தவர்களே இத்தகைய வேலைகளையும் செய்வது கவலைக்குரிய விடயம் எனவும் நிலைமை இவ்வாறு சென்றால், நல்லாட்சி உண்மையில் ஒரு கேள்விக் குறியாகி விடும் என்றும் புத்திஜீவிகள் கூறுகின்றனர்..

இராணுவ முறுகல் நிலைமை, இனவாதம், மதவாதம், ஐ.எஸ் பயங்கரவாதிகள் பற்றிய சர்ச்சை, மத்திய வங்கி பிணைமுறி, பெரியளவிலான கடன் பளு, இந்திய-சீன உறவு சமநிலைத்தன்மை, பண வீக்கம், பொது மக்கள் மீது வரிப் பளு எனப்பல பிரச்சினைகள் என்பன தற்சமயம் தலைதூக்கியுள்ள நிலையில் கடந்த ஆண்டுஏற்படுத்தப்பட்ட இந்த ஆட்சி ஆட்டம் காணுமா? என்றும் புத்திஜீவிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (ஐ)

# மணல் கடத்தலுக்கு உடந்தையான பொலிஸ் சார்ஜண்டுக்கு நடவடிக்கை

## முள்ளி விபத்துடன் தொடர்பான சாரதியையும் விடுவித்து லஞ்சம் பெற்றாராம்

நெல்லியடி, நவ.30

மண் கடத்தல்காரர்களுடன் தொடர்பைப் பேணி, அவர்களின் நடவடிக்கைக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நிர்வாகப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடந்த நான்கு வருட காலமாக நிர்வாகப் பிரிவில் கடமையாற்றிவரும் அந்த பொலிஸ் சார்ஜன்ட், துன்னாலை பகுதியில் உள்ள சட்டவிரோத மண் கடத்தல்காரர்களுடன் தொடர்பு பேணி வந்துள்ளார்.

அத்துடன் பொலிஸ் நற்சான்றிதழ்கள், ஏனைய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் வழங்குவதற்கும் அந்த சார்ஜன்ட் கையூட்டைப் பெற்று வந்துள்ளாராம்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கண்டுகொள்ளாமல் இருக்கின்றார் எனப் பொது மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், கடந்த வாரம் முள்ளிச் சந்தியில் ஹன்ரர் வாகனம் மோதி பாடசாலை அதிபர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டிருந்தார். இந்த விபத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதியை விடுவித்து அவருக்குப் பதிலாக வேறு ஒரு நபரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்த முயற்சித்துள்ளார் என்றும் இதற்கு 2 லட்சம் ரூபா பணம் பெற்றுள்ளார் என்றும் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரட்ணவிடம் காயமடைந்த நபரின் உறவினர்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பொலிஸ் சார்ஜன்ட்டுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள காங்கேசன்துறை பொலிஸ் எம்.ஆர் .றஞ் ஜித் மாசிங்கவுக்கு, பிரதி பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

விபத்து இடம்பெற்ற ஹன்ரர் வாகனத்தின் சாரதியை விடுத்து வேறு ஒருவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார். (ஐ-9)

## ஒஸ்மானியாவில் கலாசார விழா

யாழ். பொலிஸ் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெறும்.

மக்களதும், பொலிஸாரதும் நல்லுறவை மேம்படுத்தும்வகையில் இக்கலாசார விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.அராலி வீதி. ''இணையும் கரங்கள்'' சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள நடமாடும் சேவை நிலையப் பெறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், சிறார்களின் கலை நிகழ்வுகளும், கலா பூஷணம் கே.எஸ்.பாலச்சந்திரனின் சமயப்பாடல்களும் இடம்பெறவுள்ளன.

இப்பகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தினமும் '' இணையும் கரங்கள் '' சனசமூக நிலையத்தில் பொலிஸாரால் மேற்கோள்ளப் பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ19)

## உயர்தர மாணவருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.30

சுன்னாகப் பாரம்பரிய றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் Higherstudy.lk வழங்கும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட் சையை நிறைவு செய்தவர்களுக்கான இலவச செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை 3ஆம் திகதி காலை 9 மணி முதல் சுன்னாகம் வலி. தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"Social Media for Business'' எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இந் இலவச செயலமர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 0774083570 என்ற தொலைபேசி ஊடாக பதிவு செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## நூலக வாசிப்பு மாதமும் இறுதி நிகழ்வும்

உடுவில், நவ.30

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அலுவலக மண்டபத்தில் இடம்பெறும்.

உடுவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் தி.சுதர்சனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரி.மலர்மகளும் கலந்து கொள்வர். (இ-7)

* * *

வலி .தெற்கு பிரதேச சபை சுன்னாகம் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாளும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி.தெற்கு பிரதேசசபை செயலாளர் தி.சுதர்சன் தலைமையில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர் அ.காந்தலட்சுமி, சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச சபை ம்ன்னாள் செயலாளர் தி.தியாகசந்திரன், கிருபா லேனர்ஸ் முகாமையாளர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் நடனம்,நாடகம், வாசிப்பு மாத போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு என்பன இடம்பெறவுள்ளன. (இ-54)

# மானிப்பாய் சந்தைக்கு வருவோர் முட்டி மோதிக்கொள்ளும் நிலை

## இடநெருக்கடியே காரணம்

யாழ்ப்பாணம்,நவ.30

மானிப்பாய் மத்திய சந்தையில் கடலுணவு விற்பனை நிலையத்தில் நிலவும் இடநெருக்கடி காரணமாக அங்கு வரும் பொதுமக்கள் ஒருவருடன் ஒருவர் முட்டி மோதவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அசௌகரியமான இந் நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள மக்கள், இடநெருக்கடியைத் தவிர்த்து நடமாடக் கூடிய சூழலை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச சபை செயலாளரைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள 7 பொதுச்சந்தைகளில் மானிப்பாய் பொதுச் சந்தை முன்னனி வகிக்கும் அதேநேரம் பிரதேசசபைக்கு கூடுதலான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றது.

பிரதான வீதியில் சிறிய நிலப்பரப்பைக் கொண்ட சந்தை வளாகத்தில் சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம், மரக்கறி விற்பனை நிலையம், கடலுணவு விற்பனை நிலையம், இறைச்சிக் கடைகள், பழக்கடைகள் என்பன இயங்கி வருவதுடன் அங்காடி வியாபாரிகளும் முற்றுகையிட்டுள்ளார்கள்.

இந்த சந்தைக்கு மானிப்பாய்க் கோவில் பற்றிலுள்ள ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வந்தவண்ணமிருக்கிறார்கள்.

கடலுணவுவிற்பனை செய்யும் சிறிய கட்டடத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள் மீன் விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அங்கு வருபவர்கள் மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள், ஓட்டோக்களையும் பரவலாக நிறுத்தி விடுவதால் மக்கள் நடமாட முடியாமல் இருக்கின்றது.

இக் குறைபாடுகள் பற்றி கவனம் எடுத்து விரைவாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-59)

## திருவாசகம் முற்றோதல்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை வியாழக் கிழமை காலை 7மணி தொடக்கம் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெற உள்ளது.

இந் நிகழ்வில் அடியார்களை பங்கு கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அமைக்கின்றனர். (இ)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகையாளர்கள் வெற்றிடம்

'காலைக்கதிர்' நாளிதழின் ஆசிரிய பீடத்தில் பின்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன


- உதவி ஆசிரியர்
- அலுவலகச் செய்தியாளர்
- பயிற்சிப் பத்திரிகையாளர்
- ஒப்புநோக்குநர்கள்

இணைய விரும்புவோர் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

செய்தி ஆசிரியர்,
'காலைக்கதிர்'
இல. 30,கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் - 021 222 3000

# இலங்கையின் முப்படைத் தளபதிகளுடன் அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி பேச்சு



கொழும்பு, நவ.30

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ், நேற்று முன்தினம் இலங்கையின் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய காலி கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக, கடந்த ஞாயிற்றுக்கிழமை அட்மிரல் ஹரி ஹரிஸ் இலங்கைக்கு வந்தார். அன்றைய தினமே அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கோல்பேஸ் விடுதியில் ஆரம்பமாகிய காலி கலந்துரையாடலில் பங்குபற்றிய அட்மிரல் ஹரி ஹரிஸ், முப்படைத் தளபதிகளுடன் தனித்தனியாக பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜெயம்பதி ஆகியோருடன் அமெரிக்கத் தளபதி இந்தப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரேஸிலில் இருந்து வந்த 72 சீனிக் கொள்கலன்கள் போதைப்பொருள் ஒழிப்புக் பிரிவினரால் தடுத்துவைப்பு

கொழும்பு, நவ.30

பிரேஸிலில் இருந்து வந்த மேலும் 72 சீனிக் கொள்கலன்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சுங்கத் திணைக்களத்தில் பரிசோதனைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஏற்கனவே வந்திருந்த 34 கொள்கலன்களில் சுங்கப் பரிசோதனையை மாத்திரம் முடித்துக்கொண்டு வெளியேறிய 20 கொள்கலன்கள் மீதான விசாரணை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வழியாக போர்த்துக்கல்லுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அனுப்பப்படும் இத்தகைய கொள்கலன்களில் கொக்கெய்ன் போதைப்பொருள் கடத்தப்படும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கொள்கலன்களைத் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இலங்கை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் சர்வதேச பொலிஸாருக்கு அறிவித்தல் கொடுத்திருப்பதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, சுங்கத்தில் தடுத்துவைக்கப்படும் பிரேஸிலிலிருந்து வந்த சீனிக் கொள்கலன்களை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அதற்கமைய அத்தகைய கொள்கலன்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரினதும் சுங்க அதிகாரிகளினதும் முன்னிலையில் கூட்டாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எதியோப்பியாவில் இலங்கை தூதரகம்

கொழும்பு, நவ.30

எத்தியோப்பியாவுக்கான இலங்கையின் முதலாவது தூதுவராக சுமித் தசநாயக்க விரைவில் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எதியோப்பியாவுக்கான இலங்கையின் புதிய தூதரகம் அந்நாட்டின் தலைநகர் அடிஸ்அபாபாவில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதியோப்பியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிடையே இராஜதந்திர மட்டத்தில் தொடர்புகளை விருத்தி செய்து கொள்ளவும், 54 நாடுகளின் உறுப்புரிமை உடைய ஆபிரிக்க சங்கத்துடன் கொண்டுள்ள உறவு என்பன காரணமாக இந்த தூதரகம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

## இந்திய கடற்படைத் தளபதியுடன் பாதுகாப்புச் செயலர் சந்திப்பு



கொழும்பு, நவ.30

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, இலங்கைப் பாதுகாப்புச் செயலரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்தடைந்தார்.

காலி கலந்துரையாடலில் பங்கேற்கும் வகையிலும், இலங்கை அரச மற்றும் பாதுகாப்புத் தரப்பினரைச் சந்திக்கும் நோக்கிலும், அட்மிரல் சுனில் லன்பாவின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்திய கடற் படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியுடன் பேச்சுக்களை நடத்தினார். பாதுகாப்பு அமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## இலங்கை - இந்தியா இடையே விரைவில் கூட்டுப் பயிற்சி

கொழும்பு, நவ.30

கூட்டுப் பயிற்சிகளை நடத்துவது தொடர்பாக இலங்கையுடன், இந்திய கடலோரக் காவல்படை புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளது.

இந்திய கடலோரக் காவல் படைப் பணிப்பாளர் நாயகம் ராஜேந்திர சிங் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கூட்டுப் பயிற்சிகளை நடத்துவது தொடர்பாக இந்திய கடலோரக் காவல்படை ஜப்பான், தென்கொரியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்நாம், ஓமான் ஆகிய ஆறு நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ளது. மேலும், இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுடன் உடன்பாடுகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை செய்யப்படமாட்டாது

**- அமைச்சர் அர்ஜூன**

கொழும்பு, நவ.30

ஹம்பாந்தோட்டை துறைமுகம் தனியாருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அலுவல்கள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் மீதான வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு வளங்களை தனியாருக்கு விற்பனை செய்யக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நல்லாட்சி அரசு இருக்கின்றது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதே எமது நோக்கம். முதலீட்டாளர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். தனியாரையும் இணைத்துக் கொண்டு உரித்தையும் விட்டுக்கொடுக்காது முன்நோக்கிப் பயணிப்பதே எமது திட்டமாகும். மாறாக துறைமுகத்தை தனியார் மயப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# புதிய அரசமைப்பைக் குழப்பும் முயற்சியில் இரு பக்கங்களிலும் பலர் செயற்படுகின்றனர்!

## வடக்கு சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியையும், வரவிருக்கின்ற புதிய அரசமைப்பையும் குழப்புவதற்கு இரண்டு பக்கங்களிலும் பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கல்மடு பகுதியில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவிதார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்:-

இந்தப் பிரதேசம் ஒரு முக்கியமான பிரதேசம். நீண்ட நாள்களாக இந்த மண்ணிலே இடம்பெற்ற போராட்டத்தில் பல மாவீரர்களை ஈன்ற புனிதமான மண். இந்தப் பிரதேசத்திலே விடுதலைப் புலிகள் மாத்திரமில்லை. பெருந்தொகையான இளைஞர்கள் போராட்ட காலங்களில் பல விடுதலை அமைப்புக்களில் இணைந்து தமது இன்னுயிர்களை ஈகம் செய்துள்ளார்கள்.

போராட்டத்திலே தங்களது உயிரைத் தியாகம் செய்த நவம்பர் 27 மாவீரர்களுடைய நாள். அந்த நாளில் பல ஆண்டுகளுக்குப் பிறகு இராணுவ கட்டுப்பாட்டில் முன்னர் செய்யாத பல விடயங்கள் நடைபெற்றன.

எங்களுடைய மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பின்னர் அவை அடித்து உடைக்கப்பட்டு அங்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. இறந்த பின்னரும் கூட மாவீரர்களுக்குரிய மரியாதை கொடுக்கப்படாமல் அவை நொருக்கி நாசமாக்கப்பட்டன.

### மாவீரர் மயானங்களை பேணுமாறு கூறிய இராணுவ அதிகாரி

ஈச்சங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவம் 'ரணபோச' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பின்னரும் கூட அப்போது இருந்த இராணுவ அதிகாரி இக்கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் கொடுத்து மாவீரர் துயிலும் இல்லங்களை பேணுங்கள் என்று கூறிய வரலாறு கூட இங்கு உள்ளது.

ஆனால், பின்னர் ஆட்சியில் இருந்தவர்கள் அந்த மாவீரர்களின் பெற்றோர்களை அழைத்து அவர்களது கையால் அவற்றை அடித்து உடைத்திருந்தார்கள். எனவே நாம் 2017ஆம் ஆண்டு மாவீரர் தினத்தை எங்களது ஈச்சங்குளத்தில் இருக்கின்ற மாவீர்ர்துயிலும் இல்லத்தில் செய்ய முடியும். எங்களது மாவீரர்களது இடத்தை நிச்சயமாக அரசு விடுவிக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் இந்த நாட்டில் நல்லதொரு நிர்வாகம், ஆட்சி இடம்பெற வேண்டும் என இரு தரப்பினரும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டுபக்கத்தில் இருந்தும் இந்த விடயங்களை குழப்பும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே எங்களை நாங்களே ஆளக்கூடிய ஓர் அரசமைப்பு மாற்றம் ஏற்படுவதை இரண்டு பக்கத்திலும் சிலர் விரும்பவில்லை. அவர்களுடைய அரசியல் பிழைப்பு அதில் தங்கியுள்ளது.

### எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம்

இந்த நாட்டிலே நடக்கின்ற நல்லாட்சிக்குரிய அல்லது சமாதானத்துக்குரிய அல்லது நாங்கள் இந்த நாட்டிலே சகஜமாக எல்லா இனங்களுடனும் சேர்ந்து வாழக் கூடியதாக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் இதை பலவிதத்திலும் குழுப்புவதற்கு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் முப்பதாண்டுகள் யுத்தத்தில் பல இழப்புக்களை சந்தித்து நிற்கின்றோம். உயிர்கள், உடைமைகள் மாத்திரம் அல்ல எங்களது சமுதாயத்திலே நாங்கள் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை இழந்தவர்களாக இருக்கின்றோம்.

இந்த நாட்டிலே நடக்கக் கூடாத பல விடயங்கள் நடந்து விட்டன. ஆகவே, இவை மீண்டும் நடைபெறாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் எங்களை ஆளக் கூடிய இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து இனங்களும் சமாதானமானவர்களாக வாழக் கூடிய வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.- என்றார். (இ-100)

## முன்பள்ளியின் கலைநிகழ்வு



வவுனியா, நவ. 30

வவுனியா வாணி அருணோதயா முன்பள்ளியின் 6ஆம் ஆண்டு கலை நிகழ்வுகள் எஸ். தயாளன் தலைமையில் சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் கே. மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அதிதிகளாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் அதிபர் பா.கமலேஸ்வரி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவாகிய க.சந்திரகுலசிங்கம் மற்றும் மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.கென்னடி, சமாதான நீதவான் எம்.அமிர்தலிங்கம், முன்னாள் கிராம சேவையாளர். பாலசுப்ரமணியம், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் எ.ஆர்.எம்.ஜெமீல் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## கூட்டு முயற்சி இருந்தால் இலக்கை எட்டமுடியும்

### முன்னாள் எம்.பி.வினோநோகராதலிங்கம்

கூட்டு பொறுப்பு இருந்தால் நாம் எமது இலக்கை எட்ட முடியும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கல்மடு நேற்று முன்தினம் இடம்பெற்ற பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:-

பல சவால்களுக்கு மத்தியில் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் மிகவும் சிறப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெற்றோர்கள், பொதுமக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்புடன் மாவீரர் தினம் கொண்டாடப்பட்டது.

தயார்ப் படுத்தல்கள் குறைவாக இருந்தாலும் அந்த உணர்வுபூர்வமான பங்களிப்பு இருந்ததன் காரணமாக மிகச் சிறப்பாக செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது.

அந்த நிலைமை வேறு தேவைகளுக்கும் எங்களுக்குள் நல்ல விழிப்புணர்வு இருக்க வேண்டும். கூட்டுப் பொறுப்பு இருந்தால் நாம் எமது இலக்கை அல்லது செய்பவற்றை எட்ட முடியும். இந்தக் கட்டடம் கூடகூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டதால் தான் கட்டி முடிக்க முடிந்தது. அதன் பயன்பாடு மட்டுமல்ல எமது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண கூட்டுப் பொறுப்பு அவசியம்.

அதற்கு நீங்கள் எல்லோரும் ஒன்றாகச் செயற்பட்டு ஒரே திசையில் பயணித்தால் அதன் பயனை அடைய முடியும்.- என்றார். (ஐ-100)

## மன்னார் நகர அபிவிருத்திக்கு 157.6 மில்லியன் ரூபா நிதி

### திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு வழங்கியது

மன்னார், நவ.30

மன்னார் நகர அபிவிருத்திக்கு 157.6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு 157.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் மன்னார் மாவட்டத்தின் பல வீதிகளைப் புனரமைக்கும் திட்டம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலர் பிரிவிலும் முசலி பிரதேச செயலர் பிரிவிலும் அங்குரார்ப்பண நிகழ்வுகள் இடம்பெற்றன.

இது தொடர்பாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

குறித்த தொகை நிதியை மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கித்தந்த நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எச்.எம்.ரயீஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நகரத் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளும், அரசியல் பிரமுகர்களும் குறித்த நிதியை ஒதுக்குவது தொடர்பாகவும் வீதிகளைத் திருத்துமாறும் கோரிய வேளையிலே, அதனை தாம் நிறைவேற்றித் தருகின்றோம் என்று வாக்களித்திருந்தோம்.

இந்த நிலையிலேயே நிதி மன்னார் மாவட்ட வீதிகளை புனரமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

வருட இறுதியாக உள்ளதனால் டிசெம்பர் மாத இறுதிக்குள் சகல வேலைகளையும் நேர்த்தியாகவும் ஒப்பந்த விதிமுறைகளுக்கு உட்பட்டும் செய்து முடிக்குமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டோம்.- என்றார்.

உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் எச்.எம்.ரயீஸ், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முதலிபா பாரூக், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மன்னார் வவுனியா பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், மன்னார் மாவட்ட நிறைவேற்று பொறியியலாளர் எஸ். துஸ்யந்தன், இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலை முகாமையாளர் சாகிர், தொழில்நுட்ப உதவியாளர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் வீதிகளின் விவரம், ஒதுக்கப்பட்ட நிதி குறித்து வருமாறு:-

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 8 வீதிகள் - பேசாலை கடற்கரை வீதி - 200 மீற்றர் 3 மில்லியன், சின்னக்கரிசல் ஓலைதொடுவாய் வீதி - 350 மீற்றர் 4.5 மில்லியன், தாழ்வுபாடு கடற்கரை வீதி - 200 மீற்றர் 3 மில்லியன், கோணார்ப் பண்ணை புதுக்குடியிருப்பு வீதி - 500 மீற்றர் 6.5 மில்லியன், எருக்கலம்பிட்டி மதரஸா வீதி - ஒரு கிலோ மீற்றர் 13.3 மில்லியன், எருக்கலம்பிட்டி பள்ளிவாசல் வீதி - 360 மீற்றர் 5.4 மில்லியன், மன்னார் நகர கடைத்தெரு வீதி - 550 மீற்றர் 7.3 மில்லியன், மன்னார் சிறிய குருமட வீதி - 680 மீற்றர் 09 மில்லியன்.

முசலி பிரதேச செயலக பிரிவில் 10 வீதிகள் - பண்டாரவெளி, வாரிவெளி வீதி - 1.2 கிலோ மீற்றர் 14.4 மில்லியன், முள்ளிக்குளம் உள்ளக வீதி - ஒரு கிலோ மீற்றர் 12 மில்லியன், கொண்டச்சி உள்ளக வீதி - 500 மீற்றர் 06 மில்லியன், வெள்ளிமலை உள்ளக வீதி - ஒரு கிலோ மீற்றர் 12 மில்லியன், சிலாவத்துறை நகர பள்ளிவாசல் வீதி - 600 மீற்றர் 7.2 மில்லியன், பண்டாரவெளி ஏ. எஸ். குளம் உள்ளக வீதி - 200 மீற்றர் 2.4 மில்லியன், முசலி குளக்கட்டு உள்ளக வீதி - 1.3 கிலோ மீற்றர் 15.6 மில்லியன், அகத்தி முறிப்பு உள்ளக வீதி - ஒரு கிலோ மீற்றர் 12 மில்லியன், பெரிய புள்ளச்சி பொற்கேணி உள்ளக வீதி ஒன்று - ஒரு கிலோ மீற்றர் 12 மில்லியன், பெரிய புள்ளச்சி பொற்கேணி உள்ளக வீதி இரண்டு - 01 கி.மீற்றர் 12 மில்லியன்.(ஐ-112)

# சுய சிந்தனையுள்ள சமுதாயத்தை வாசிப்பு பழக்கம் உருவாக்கும்

■ வைஷ்ணவப்பிரியன்

## வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்தும் தெருவெளி ஆற்றுகைகள்

அறிவுடைய சமுதாயம் ஒன்றின் உருவாக்கத்துக்கு பல்துறைப்பட்ட வாசிப்புத்தேடல் அவசியமாகின்றது. 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்' என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. மனிதனானவன் தன்னுடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கான ஊடகமாக வாசிப்பைப் பயன்படுத்துகின்றான். வாசிப்பு இளம் சமுதாயத்தினிடையே அருகிச் செல்கின்றது என்ற குற்றச்சாட்டு அனைவராலும் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது.

இவ்வாறு அருகிச்செல்லும் வாசிப்புப் பழக்கத்தை இளம் சமுதாயத்தினரிடையே ஊட்டவும் அறிவு நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் பணிகளை நூலகங்கள் ஆற்றி வருகின்றன. இந்த இயங்குதளத்தின் அடிப்படையில் வருடாந்தம் நூலகங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வாசிப்புப் பழக்கத்தை இளம் சமுதாயத்தினரிடையே ஊக்குவிக்கும் ஊடகமாகத் தெருவெளி ஆற்றுகை புத்தாக்க அரங்க இயக்கத்தால் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டு தொடர் நிலையாக நான்காவது வருடமாகவும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பிரசார ஊடகமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பாடானது புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களால் 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்' என்னும் தெருவெளி ஆற்றுகையாக 2013 ஆம் ஆண்டு இணுவில் பொது நூலக அனுசரணையில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்தத் தெருவெளி ஆற்றுகையின் வரவேற்பு காரணமாக வருடாந்தம் தொடர் நிலை செயற்பாடாகப் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்புப் படைப்பாக பல்வேறு இடங்களில் இது ஆற்றுகை செய்யப்படுகின்றது.

'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்' என்னும் தெருவெளி ஆற்றுகை, வாசிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களால் யாழ். மாவட்டத்தின் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்கள், சன சமூக நிலையங்கள், ஆலய வீதிகள் ஆகிய இடங்களில் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இந்தத் தெருவெளி ஆற்றுகைக்கான நெறியாள்கையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன், புத்தாக்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் தெருவெளி ஆற்றுகை பெரும்பாலும் பாடசாலை மாணவர்களையே இலக்குப் பார்வையாளர்களாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்டது. யாழ்.மாவட்டத்தின் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொது இடங்கள் எனத் தொடர்ச்சியாக நான்காவது வருடமாக 200 இற்கும் மேற்பட்ட ஆற்றுகைகளாக இந்தத் தெருவெளி ஆற்றுகை வாசிப்பு மாத காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வாசிப்பின் அவசியம், நூலகங்களின் பயன்பாடு என்பன ஆற்றுகைக்கு ஊடாகச் சொல்லப்பட்டிருக்கின்றமை சிறப்புக்குரியதாகின்றன. பாடலும் ஆடலும் நகைச்சுவை உணர்வுக்கு ஊடாகவும் 'வாசிப்பதால் மனிதன் பூரணமடை கின்றான்' என்னும் தெருவெளி ஆற்றுகை வாசிப்பின் அவசியம் கருதிய கருத்தைப் பிரசாரப்படுத்தியிருந்தது.

எம்மிடையே காணப்படுகின்ற கல்வி நடைமுறையின் குறைபாடு காரணமாகப் பரீட்சை மையக்கற்கை நெறியே காணப்படுகின்றது. இது









ஒரு வகையில் திணிப்புசார் கல்விச் செயற்பாடாகக் காணப்படுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்களாலும் வீடுகளில் பெற்றோர்களாலும் கல்வி திணிக்கப்படுகின்றது. இந்தக் கல்விச் செயற்பாடு காரணமாக சுயசிந்தனை, சுய ஆளுமையற்ற புதிய தேடலை மேற்கொள்ளாத சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இத்தகைய கல்வி நடைமுறைகளுக்கு மேலாக சுயதேடலை, புத்தாக்க சிந்தனையுடைய மாணவர்களான எமது இளம் தலைமுறையினர் உருவாகுவதற்கு வாசிப்புப் பழக்கம் அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

இந்த வாசிப்பின் ஊடாக- நூலகப் பயன்பாட்டின் ஊடாக- சுயசிந்தனை, சுய ஆளுமையுள்ள சமூகம் ஒன்றை உருவாக்க முடியும் என்னும் செய்தியைச் சொல்வதாக இந்தத் தெருவெளி ஆற்றுகை அமைகின்றது. இந்த ஆற்றுகை அனைத்துத் தரப்பினரிடையேயும் வரவேற்பைப் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. நகைச்சுவை உணர்வின் ஊடாகச் சொல்ல வந்த விடயத்தைப் பார்வையாளர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொன்ன முறைமை இவ் ஆற்றுகைக்குப் பலம் சேர்க்கின்றது.

சமூகத்தின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலும் சமூகப்பணியை மேற்கொள்வதிலும் சிறந்த ஊடகமாக நாடகக் கலை விளங்குகின்றது. இதன் அடிப்படையில் வாசிப்பின் அவசியத்தை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லும் ஊடகமாகத் தெருவெளி ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது.

பார்வையாளர்களை நாடிச்சென்று தனது வடிவத்தின் ஊடாகக் கருத்தை வெளிப்படுத்துகின்ற சிறந்த ஊடகமாகத் தெருவெளி நாடகங்கள் விளங்குகின்றன. இத்தகைய தெருவெளி நாடகங்களுக்குரிய முழுமையான பண்புகளைக் கொண்டமைந்து, சிறந்த ஆற்றுகையாகப் பெரும் எண்ணிக்கையானவர்களிடம் இது சென்றடைந்துள்ளமை சிறப்புக்குரியதாகின்றது.

வாசிப்பின் முக்கியத்துவம் கருதி இளம் தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புத்தாக்க அரங்க இயக்கக்கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட 'வாசிப்பால் மனிதன் பூரணமடைகின்றான்' என்ற தெருவெளி ஆற்றுகை காலத்தின் தேவை.

காலைக்கதிர் Kalaikkathir



பொன்.வேணு கிருஷ்ணா



# பிடல் காஸ்ட்ரோ கடந்து வந்த பாதை

அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கியூபாவின் அதிபராகப் பதவி வகித்த பிடல் காஸ்ட்ரோ கடந்து வந்த பாதை இதுதான்-

1926, ஒகஸ்ட் 13: கிழக்கு கியூபாவில் உள்ள பிரனில் ஸ்பெயின் நிலச்சுவாந்தாருக்கும், கியூபா தாய்க்கும் 3ஆவது குழந்தையாகப் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.

1953, ஜூலை 26: கியூபாவின் இராணுவப் படைகளுக்கு எதிராக பிடல் காஸ்ட்ரோ தொடுத்த தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஆதரவாளர்களுடன், காஸ்ட்ரோவும் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார்.

1956, டிசெம்பர் 2: மெக்ஸிக்கோவில் இருந்து தப்பியதும் 81 போராளிகளுடன் கிரான்மா என்ற கப்பல் மூலம் தென் கிழக்குக் கியூபாவுக்கு வந்தடைந்தார். பின்னர் சியாரா மெஸ்டிரா மலைகளில் இருந்தபடி 25 மாதங்கள் இராணுவத்துக்கு எதிரான பிரசாரத்தைத் தொடங்கினார்.

1959, ஜனவரி 1: இராணுவ சர்வாதிகாரி பல் ஜெனிசியோ படிஸ்டா நாட்டை விட்டுத் தப்பியோடினார்.



பின்னர் ஜனவரி 8ஆம் திகதி காஸ்ட்ரோ வெற்றி உற்சாகத்துடன் நாட்டுக்குள் நுழைந்தார். பெப்ரவரியில் கியூபாவின் பிரதமராகப் பதவியேற்றார்.

1959, ஏப்ரல் 15-27: அமெரிக்கா சென்றார். ஆனால், அமெரிக்கஜனாதிபதி ஐஸனோவர் காஸ்ட்ரோவைச் சந்திக்க மறுத்தார்.

1960: சோவியத் யூனியனுடன் இராஜாங்க ரீதியிலான உறவை ஏற்படுத்தினார்.

1961: கியூபாவுடனான ராஜாங்க உறவுகளை அமெரிக்கா முறித்துக் கொண்டது.

1961, ஏப்ரல் 17-19: அமெரிக்க ஆதரவுடன் பே ஓவ் பிக்ஸ் பகுதியில் நடந்த படையெடுப்பில் எதிர்ப்பாளர்கள் ஆயிரத்து400 பேரை விரட்டியடித்து வெற்றி பெற்றார்.

1962, பெப்ரவரி 13: அமெரிக்க அதிபர் ஜோன் எவ் கென்னடி கியூபாவுக்கு எதிராக ஏற்றுமதித் தடை விதிக்கும் ஆணை பிறப்பித்தார்.

1962, ஒக்டோபர்: கியூபாவுக்கு ஆதரவாக சோவியத் யூனியன் ஏவுகணைகளை நிலைநிறுத்தியது. பின்னர் கியூபா மீது படையெடுப்பு இல்லை என்ற உத்தரவை அமெரிக்கா வழங்கியதும், ஏவுகணைகளை சோவியத் யூனியன் வாபஸ் பெற்றது.

1963 ஏப்ரல்: முதல் முறையாகச் சோவியத் யூனியன் சென்றார் காஸ்ட்ரோ.

1965: கியூபா கம்யூனிசக் கட்சியை நிறுவினார் காஸ்ட்ரோ.

1990: சோவியத் யூனியன் உடைந்ததால் கியூபா மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது.

1995: முதல் முறையாக சீனா சென்றார் காஸ்ட்ரோ.

1998: கியூபாவுக்கு வந்த புனித பாப்பரசரை வரவேற்றார் காஸ்ட்ரோ.

2003, மார்ச்: அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் 75 பேரைக் கைது செய்வதற்கு காஸ்ட்ரோ உத்தரவு பிறப்பித்தார்.

2006, ஜூலை 31: ஆபத்தான குடல் அறுவைச் சிகிச்சை காரணமாகத் தனது பதவியை சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் தற்காலிகமாக ஒப்படைத்தார் காஸ்ட்ரோ. அப்போது அவருக்கு வயது 75.

2006, டிசெம்பர் 3: உடல் நலக்குறைவு காரணமாகத் தனது 80ஆவது பிறந்த நாளில், கிரான்மா கப்பல் மூலம் தான் கியூபா மீண்டதின் 50ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்கவில்லை.

2008, பெப்ரவரி: கியூபாவின் அதிபராக ராவுல் காஸ்ட்ரோ நியமிக்கப்பட்டார்.

2014, டிசெம்பர் 17: அமெரிக்க அதிபர் ஒபாமா கியூபாவுக்கு வருகை தந்து இரு நாட்டுக்கும் இடையே சமரச பேச்சு நடத்தினார்.

2016, நவம்பர் 25: 90 வயதில் காஸ்ட்ரோ காலமானார். கியூபா கண்ணீரில் மூழ்கியது.

பிடல் காஸ்ட்ரோ, 1959 இல் தனது புரட்சியைத் தொடங்கி கியூபாவை கம்யூனிஸ தேசமாக உருவாக்கியவர். உலகின் மேற்குப் பகுதியில் முதன்முதலாக ஒரு கம்யூனிஸ தேசத்தை உருவாக்கியவர் அவர். சோவியத் ரஷ்யா துண்டு துண்டாகிவிட்ட நிலையிலும் கூட நம்பிக்கை இழக்காமல் கம்யூனிஸத்தை ஆதரித்த ஒரே நபர் பிடல் காஸ்ட்ரோ. அவருடைய பேச்சுகள்



புரட்சியின் வித்துக்கள். ஒரு மாபெரும் புரட்சியாளர் மறைந்தாலும் அவர் உதிர்த்த வார்த்தைகள் என்றும் அவரை நிலைநிறுத்தும்.

**காஸ்ரோ கூறியவை:-**

பிடல் காஸ்ரோவின் சில தெறிப்பு வாசகங்கள் இவை:

★ ''புரட்சி என்பது ரோஜாக்களால் ஆன மெத்தை அல்ல. அது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையேயான போராட்டம்'' - 1959.

★ ''எனது தாடியைச் சவரம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை. தாடி எனக்குப் பழக்கமாகிவிட்டது. இந்தத் தாடி என் மீது இத் தேச மக்களுக்கு நிறைய கற்பிதங்களைக் கொடுத்திருக்கிறது. நல்லாட்சிக்கான வாக்குறுதியை நிறைவேற்றும்போது எனது தாடியைச் சவரம் செய்து கொள்வதாக இருக்கிறேன்'' - 1959.

★ ''நான் குற்றவாளி என்று தீர்ப்பளியுங்கள். அதற்கு எந்த முக்கியத்துவமும் இருக்காது. ஏனெனில், வரலாறு என்னைக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கும்'' - 1953.

★ ''பாலியல் தொழிலாளர்களையும் கல்லூரிப் பட்டதாரிகளாக்கியதே புரட்சியின் மிகப் பெரிய பலன்'' - 2003.

★''எனது புரட்சியை 82 ஆதரவாளர்களோடு தொடங்கினேன். இப்போது மீண்டும் புரட்சியைத் தொடங்க வேண்டும் என்றால் 10 அல்லது 15 ஆதரவாளர்களுடன் தன்னம்பிக்கையைத் துணையாகக் கொண்டு ஆரம்பிப்பேன். ஏனெனில், உங்கள் இலக்குக்கான எதிர்காலத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தால், நம்பிக்கை இருந்தால் சிறு படைகூட புரட்சிக்கு வித்திடும்'' - 1959.

★ ''அமெரிக்காவுக்கு எதிரான யுத்தமே எனது உண்மையான எதிர்காலம் என நான் உணர்ந்திருந்தேன் ''- 2004.

★ ''உண்மையின் பக்கம் நாம் சார்ந்திருத்தல் அவசியம். எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் சோஷலிச கூடாரம் சரிந்தது''- 1991.

★''ஆண்டுகள் பல கடந்துவிட்ட பிறகு நான் ஓர் இறுதி முடிவுக்கு வந்துள்ளேன். நாம் இதுநாள் வரை செய்த பிழைகளிலேயே மிகப் பெரியது சோஷலிசத்தைக் கட்டமைக்கத் தெரியும் என யாரோ கூறியதை நம்பியதே. எப்போதெல்லாம் -'இதுதான் சூத்திரம்' என அவர்கள் சொன்னபோதெல்லாம்- அவர்கள் அதைப் புரிந்து உணர்ந்து சொல்கிறார்கள் என நம்பினோம். ஒரு மருத்துவரின் வார்த்தைகள் மீதான நம்பிக்கை போன்றது அது.'' - 2005.

★ ''எனக்கு 80 வயதாகிவிட்டது. உண்மையாகவே மகிழ்கிறேன். இது சாத்தியமாகும் என நான் ஒருபோதும் நினைத்ததில்லை. ஏனெனில், உலகில் ஒரு மாபெரும் சக்தியை அண்டை நாடாகக் கொண்டிருந்தோம். அதுவும் அந்த நாடு என் கதையை முடிக்க எப்போதும் ஆயத்தமாயிருந்தது.'' - 2006.

★ ''கியூப அதிபராகவோ அல்லது படைத்தளபதியாகவோ ஆக வேண்டும் என நான் ஆசைப்படமாட்டேன். ஏன் அந்த வாய்ப்பு எனக்குக் கொடுக்கப்பட்டாலும் ஏற்கமாட்டேன். அவ்வாறு நான் செய்தால் அது என் மனச்சாட்சிக்குச் செய்யும் துரோகம். அந்தப் பதவிகளை வகிக்க மிக அதிகமான செயலாற்றலும், அர்ப்பணிப்பும் தேவை. ஆனால், என் உடல்நிலை இப்போது இருக்கும் நிலையில் அந்த அர்ப்பணிப்பு சாத்தியமற்றது''- 2008

> **"எனது தாடியை சவரம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை. தாடி எனக்கு பழக்கமாகிவிட்டது. இந்தத் தாடி என் மீது இத் தேச மக்களுக்கு நிறைய கற்பிதங்களைக் கொடுத் திருக்கிறது. நல்லாட்சிக்கான வாக்குறுதியை நிறைவேற்றும்போது எனது தாடியைச் சவரம் செய்து கொள்வதாக இருக்கிறேன்"**

16

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

**'தி இந்து' நாளிதழில் வெளியான ஜி.எஸ்.எஸ்.எழுதிய 'கிடுகிடுத்த கியூபா' தொடரின் நூலில் இருந்து கட்டுரையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் இங்கே:**

அமெரிக்காவின் தெற்கு நுனியில் உள்ள புளோரிடாவில் இருந்து 140 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தீவு கியூபா. அமெரிக்காவின் பரப்பளவில் பத்தில் ஒரு பங்குகூட இல்லாத குட்டி நாடு. இதன் தலைநகர் ஹவானா. இரண்டாவது பெரிய நகர் சாண்டியாகோ. கியூபாவின் அதிகாரபூர்வ மொழி ஸ்பானிஷ். பல புயல்களை எதிர்கொண்ட நாடு (நிஜமாகவும், உருவகமாகவும்).

அமெரிக்கா ஒதுக்கி வைத்ததால் பொருளாதாரம் சீர்குலைந்த நாடு கியூபா. அதன் அரசியல் கூட இதனால் பெருமளவில் சிதைந்தது என்றாலும் கூட, கியூபா என்றவுடன் புரட்சி வீரர்களுக்கு இதெல்லாம் மனதில் தைக்காது. அவர்கள் நினைவில் எழும் உருவம் பிடல் காஸ்ட்ரோ. சோவியத் ரஷ்யா துண்டு துண்டாகிவிட்ட நிலையிலும் கூட நம்பிக்கை இழக்காமல் கம்யூனிஸத்தை ஆதரிக்கும் ஒரே நபர் பிடல் காஸ்ட்ரோ.

அவரை அழிக்க அமெரிக்கா பல முயற்சிகள் எடுத்தது எனக் கூறுவார்கள். பிடல் காஸ்ட்ரோ பிடிக்கும் சுருட்டுக்குள் வெடிவைத்து அவர் முகத்தை சின்னாபின்னமாக்கக் கூட ஒரு முயற்சி நடந்தது எனக் கூறுவார்கள். ஆனால் பலிக்கவில்லை.

## இளம் வழக்கறிஞர் பிடல் காஸ்ட்ரோ!

கியூபாவில் தனது இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியது அமெரிக்கா. சில வருடங்கள் தான். கியூபா வாசிகள் ஸ்பெயினுக்காகக் காட்டிய அதே சிவப்புக் கொடியை அமெரிக்காவுக்கும் காட்டினார்கள். அமெரிக்கா பணிந்தது. கியூபா தன்னைத்தானே ஆளட்டும் என்று விட்டுக்கொடுத்தது.

ஆனால் 'கியூபாவிலுள்ள காண்டனமோ விரிகுடா என்ற இடத்தை அமெரிக்காவுக்கு நிரந்தரக் குத்தகைக்கு விடவேண்டும். அங்கே அமெரிக்கா தனது கடற்படையை நிறுத்தி வைக்கலாம்' என்பது போன்ற நிபந்தனைகளை விதித்தது. அன்றைய அவசரத்துக்கு கியூபா இதற்கு ஒப்புக் கொண்டது.

படிஸ்டா என்பவர் சுதந்திர கியூபாவின் அதிபரானார். தான் வைத்ததுதான் சட்டம் என்று அவர் ஆட்சி நடத்த ஆரம்பித்தபோது மக்கள் நொந்து நூலாகிப்போனார்கள்.

இதைக் கண்டு குமுறினார் ஓர் இளம் வழக்கறிஞர். குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளை படிஸ்டா வரவேற்பதற்கு எதிர்ப்புக் காட்டினார். படிஸ்டாவுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையானவுடன், மெக்ஸிக்கோவுக்குச் சென்று திட்டங்களைத் தீட்டிய அந்த இளம் வழக்கறிஞர் பிடல் காஸ்ட்ரோ!.

(கேள்வி தொடரும்...)



# உலக வரலாறும் மனித விடுதலையும்

16



தமது இன அடையாளங்களைப் பாதுகாப்பதற்காகவும் நிலைப்படுத்துவதற்காகவும் மக்கள் சமூகங்கள் காலங்காலமாகப் போராடி வருகின்றன. ஆதிக் குடிகளும், இனக்குழுமங்களும், மத சமூகங்களும் தேசிய இனங்களும் தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேண எல்லாக் காலங்களிலும் போராடி வருகின்றன. தமது இனத்துவ, பண்பாட்டு அடையாளங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் பொழுது அன்றி, ஓர் இனம் இன்னோர் இனத்தை அடிமைகொள்ள எத்தனிக்கும் போது அல்லது ஓர் இனத்தின் பாரம்பரிய நிலப்பரப்பை இன்னோர் இனம் ஆக்கிரமிக்க முயலும்போது இனப்போர்கள் வெடிக்கின்றன. இனப்போர்கள் பல நீண்ட காலமாக முடிவின்றித் தொடர்கின்றன. போர் நிறுத்தங்கள் ஏற்படுவதும், அவை முறிந்துபோக மீண்டும் போர் தொடங்குவதுமாக இன நெருக்கடிகள் நீடிப்பதுண்டு. இனப்போர்கள் இரு நாடுகள் மத்தியிலும் எழலாம். அன்றி, இரு வேறுபட்ட நாகரிகங்களைச் சேர்ந்த இனக் குழுமங்கள் மத்தியிலும் தேசிய இனங்கள் மத்தியிலும் ஏற்படலாம். ஒரே நாட்டில் வதியும் வேறுபட்ட மக்கள் சமூகங்கள் மத்தியிலும் மோதல்கள் எழலாம். (உதாரணமாக இந்தியாவில் நிகழும் இந்து - முஸ்லிம் கலவரங்கள்). பொதுவாகவே இனப்போர்கள் மிகவும் கொடூரமானவையாக, ஈவிரக்கமற்றனவையாக அமைவதுண்டு. சில சமயங்களில் இனக்கொலைப் பரிமாணத்தையும் அவை அடைவதுண்டு. இந்த இனப்போர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்டு பல தசாப்தங்களாகத் தொடர்வதுண்டு. தெற்கு சூடானில், பிலிப்பைன்சில், காஷ்மீரில், பொஸ்னியாவில், குரோசியாவில், திபேத்தில், செச்சினியாவில், சிறிலங்காவில், கிழக்குத் திமோரில் ஆயிரமாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாகரிகங்கள் மத்தியிலான முரண்பாடும் மோதலுமாகவே இனப்போர்கள் வெடிக்கின்றன. வேறுபட்ட நாகரிகங்களைச் சேர்ந்த இனங்கள் மத்தியிலான போர் தீவிரமடையும் போது அவை தமது நாகரிகத்தைச் சார்ந்து நிற்கும் நாடுகளினதும் இனங்களினதும் உதவியையும் ஆதரவையும் நாடுவது இயல்பு. நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது வேறு வழியிலோ நிதியுதவியாக, இராணுவ உதவியாக, அரசியல் இராஜதந்திர ஆதரவாக ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தமது இன உறவுகளுக்குக் கைகொடுப்பதுண்டு. குறிப்பாக, முஸ்லிம் இனங்கள் வேறுபட்ட நாகரிகங்ளைச் சார்ந்த சமூகங்கள் அல்லது நாடுகளுடன் நெருக்கடிகளுக்குள் சிக்குப்படும் பொழுது முஸ்லிம் அரசுகள் தமது இனத்து உறவுகளுக்கு உதவுகின்றன. உதாரணமாக, காஷ்மீர் முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தானும், பாலஸ்தீனர்களுக்கு அரபுநாடுகளும், செச்சினியா முஸ்லிம்களுக்கு ஈரானும் என்ற ரீதியில் இஸ்லாமிய நாகரிக உலகம் தனது முஸ்லிம் இனத்தவர்களுக்குக் கைகொடுத்து உதவி வருகிறது. இப்படியாக ஓர் இனத்துக்கு அதே இனத்தைச் சார்ந்த இன்னொரு நாடோ இனமோ உதவி வழங்கும் பொழுது அந்த நெருக்கடி மேலும் விரிவடைந்து நாகரிகங்கள் மத்தியிலான பெரும் மோதலாக வெடிக்கலாம். உதாரணமாக, காஷ்மீர் முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் வழங்கிய இராணுவ உதவிகள் இந்தியாவுடனான போருக்கு வழிகோலியது. அதாவது, இஸ்லாமிய – இந்து நாகரிகங்கள் மத்தியிலான மோதல்களுக்குக் காரணமாக அமைந்தது. ஒட்டுமொத்தத்தில் மனித இனங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நாகரிக மையத்துடன் பிணைந்திருப்பதால் இன நெருக்கடிகள், சில சமயங்களில் நாகரிகங்கள் மத்தியிலான மோதல்களுக்குவழிகோலும்வாய்ப்புண்டு என்பது ஹண்டிங்ரனது நிலைப்பாடு.

நாகரிகங்கள் மத்தியிலான முரண்பாடு மோதலுமாகவே இனப்போர்கள் வெடிக்கின்றன. வேறுபட்ட நாகரிகங்களைச் சேர்ந்த இனங்கள் மத்தியிலான போர் தீவிரமடையும் போது அவை தமது நாகரிகத்தைச் சார்ந்து நிற்கும் நாடுகளின தும் இனங்களினதும் உதவியையும் ஆதரவையும் நாடுவது இயல்பு. நேரடி யாகவோ மறைமுகமாகவோ அல்லது வேறு வழியிலோ நிதியுதவியாக, இராணுவ உதவியாக, அரசியல் இராஜதந்திர ஆதரவாக ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தமது இன உறவுகளுக்குக் கைகொடுப்பதுண்டு. குறிப்பாக, முஸ்லிம் இனங்கள் வேறுபட்ட நாகரிகங்களைச் சார்ந்த சமூகங்கள் அல்லது நாடுகளுடன் நெருக்கடிகளுக்குள் சிக்குப்படும் பொழுது முஸ்லிம் அரசுகள் தமது இனத்து உறவுகளுக்கு உதவுகின்றன.

இப்படியாகப் பண்பாட்டு மையங்களாகவும் பலதரப்பட்ட நாகரிகங்களாகவும் உலகத்தைச் சித்திரிக்கும் ஹண்டிங்ரன், உலக நாகரிகங்களின் தன்மைகளையும், அவற்றின் அபிலாஷைகளையும் அவை மத்தியில் நிலவும் முரணியங்களையும் அதனால் எழக்கூடிய பேரபாயங்களையும் விளக்குகின்றார். இவரது பார்வையில் வல்லரசுகளும், வலிமை பெற்ற நாடுகளும் உலக ஒழுங்கை நிர்ணயிக்கப் போவதில்லை. இன்றைய உலக நாடகத்தில் அரசுகள் முக்கியமான கதாபாத்திரங்களாக நடித்தபோதும், அரசுகளும் நாடுகளும் இனங்களும் வெவ்வேறான நாகரிக உலகங்களுடன் சங்கமித்து நிற்பதால் நாகரிகங்களின் வளர்ச்சியும் எழுச்சியும் அவை மத்தியில் நிலவும் உறவுமுறைகளுமே எதிர்கால உலக ஒழுங்கமைப்பை யும் மனித வரலாற்றின் போக்கையும் நிர்ணயிக்கும் என்பது ஹண்டிங்ரனது வாதமாகும்.

ஹண்டிங்ரனது நாகரிகக் கோட்பாட்டின் அடிப்படையில் இன்றைய உலக அரசியலையும் சர்வதேச உறவுகளையும் ஆழமாகத் தரிசித்துக்கொள்ள முடியுமா? உலகப் பேரரசுகளையும் நாடுகளையும் தேசிய இனங்களையும் ஒரு குறிப்பிட்ட சில பண்பாட்டு மையங்களுக்குள் உள்ளடக்கி, அவற்றின் உறவுகளையும் பிணக்குகளையும் போராட்டங்களையும் முழுமையாக விளக்கிக்கொள்ள முடியுமா? ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பை கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரிக மோதலாக எடைபோட முடியுமா? ஈராக் - அமெரிக்க யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் அமெரிக்காவுக்கும் சில ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் மத்தியில் அதாவது மேற்குலக கிறிஸ்தவ நாகரிகத்தைச் சேர்ந்த நாடுகள் மத்தியில் எழுந்த முரண்பாடுகளை எவ்விதம் புரிந்து கொள்வது? இஸ்லாமிய நாகரிகத்தின் மையமான மத்திய கிழக்கில் அமெரிக்காவினதும் ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளினதும் பிரதான நலன்கள் எவை? கிறிஸ்தவ பண்பாட்டு விழுமியங்களை முஸ்லிம் சமூகங்களிடையே திணிப்பதா அன்றி எண்ணெய் வளங்களைச் சுரண்டுவதா? இஸ்லாமிய நாகரிகத்தைச் சேர்ந்த நாடுகள் ஒரே பண்பாட்டு உலகமாக ஒன்றுபட்டு நிற்காது. பிளவுபட்டு முரண்படுவதேன்? ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்வது ஏன்? மிகவும் கொடூரமானதாக நீடித்த ஈரான் – ஈராக் போரையும் குவைத் மீதான ஈராக்கின் படையெடுப் பையும் எவ்விதம் புரிந்து கொள்வது? சீன தேசத்தை மேற்குலக கிறிஸ்தவ நாகரிகத்துக்கு விரோதமான ஆபத்தான சக்தியாக எடைபோடுவது சரியா? கம்யூனிச ஆட்சி முறையோடு மேற்குலகின் முதலாளிய உற்பத்தி முறையைத் தனது நாட்டின் பறநிலைக்கு ஏற்றவாறு பிணைத்து புதிய பரிசோதனை செய்து, சீனம் பிரமாதமாக முன்னேற்றம் காணவில்லையா? பழைய மரபுகள், சிந்தனைகளுக்கு எதிராகச் சீனாவின் பண்பாட்டுப் புரட்சி நிகழவில்லையா? அமெரிக்காவுக்கும் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கும் மத்தியிலான முரண்பாட்டை வெறும் பண்பாட்டு மோதல்களாகக் கொள்வது சரியா? இஸ்லாமிய உலகில் உள்ள மன்னராட்சிகளுக்கும் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கும் காலங்காலமாக முண்டு கொடுத்து, எண்ணெய் வளங்களைச் சுரண்டி அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் முஸ்லிம் சமூகங்களை ஏழ்மைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கவில்லையா? பாலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு எதிரான இஸ்ரேலிய அரசின்அடக்குமுறைக்கொள்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கவில்லையா? முஸ்லிம் உலகத்துக்கு எதிரான அமெரிக்கத் தலையீடுகளையும் ஆதிக்கப்போக்கையும் சுரண்டலையும் இவற்றை ஆட்சேபித்து முஸ்லிம்கள் தெரிவிக்கும் எதிர்ப்பையும் இஸ்லாமிய - கிறிஸ்தவ பண்பாட்டு மோதல் என்ற போர்வைக்குள் மறைத்துவிட முடியுமா?

ஹண்டிங்ரனின் நாகரிகக் கோட்பாடு பல குறைபாடுகளைக் கொண்டது. அவரது வரையறுக்கப்பட்ட பார்வையின் அடிப்படையில் மிகவும் சிக்கலான உலக நெருக்கடிகளையும் உலக நாடுகளின் உறவுகளையும் புரிந்துகொள்வது சாத்தியமல்ல. இன்றைய உலகத்தின் அரசியல் அரங்கில் இனப்போர்களும் இன நெருக்கடிகளுமே பிரதான இடத்தைப் பிடித்துள்ளன என அவர் கருதுவது சரியானதே. ஆயினும், இன விடுதலைப் போராட்டங்களை பண்பாட்டுத் தனித்துவத்துக்கான போராட்டமாக மட்டும் வரையறுத்துப் பார்க்க முனைவது தவறு. அந்நிய அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராகத் தேச சுதந்திரம் வேண்டி நடைபெறும் விடுதலைப் போராட்டங்களின் ஆழமான பரிமாணங்களை அவர் கண்டுகொள்ளவில்லை.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

## பாடசாலை மாணவர்களில் 18 வீதமானோர் மந்தபோசனை

கொழும்பு, நவ.30

இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களில் 18 சதவீதமானோர் மந்தபோசனைக் குறைபாடு கொண்டவர்களாக உள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மொனராகலை, பொலநறுவை, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் மந்த போசனைக் குறைபாடுகளுடன் உள்ளனர்.

மேல் மாகாணத்தில் மருதானை மற்றும் பத்தரமுல்ல பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் இந்தக் குறைபாடு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 30 சதவீதமானோர் இரும்புச்சத்துக் குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகவும் கல்வி அமைச்சின் பாடசாலை போசனை மற்றும் சுகாதார சேவைப் பிரிவின் பணிப்பாளர் ரேணுகா பீரிஸ் தெரிவித்துள்ளார்.

12 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இரும்புச் சத்து மற்றும் விற்றமின் அடங்கிய பால் மற்றும் உணவுகளை வழங்கத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு 10 ஆம் திகதியில்

கொழும்பு, நவ.30

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி வழங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியத்தின் பதில் பணிப்பாளர் பராக்கிரம பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறுவோரின் எண்ணிக்கை தற்போது 47 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## தினசரி ராசி பலன் 30.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.15 - 10.15 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 12.00 - 1.30 |
| குளிகன் | : 10.30 - 12.00 |
| எமகண்டம் | : 7.30 - 9.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார் ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம் கும்பகோணம், தமிழ்நாடு. (maruthi_jaya2003@yahoo.co.in)

சமநோக்கு நாள்

**மேஷம்** : நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல ஏற்படும்.

**ரிஷபம்** : நலம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சல்களை குறைத்துக்கொண்டு மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள். சந்திராஷ்டமம்: ரோகிணி

**மிதுனம்** :கவனம் - எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**கடகம்** : கஷ்டம் - சோம்பலினால் சுகம் குறையும் மகிழ்ச்சி குறையும் முயற்சித்தால் நன்மைகள் ஏற்படும்.

**சிம்மம்** : பாசம் - அனைவரிடத்திலும் ஈகை கொண்டும் அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும் நன்னாள்.

**கன்னி** : உயர்வு - அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு தரும் நாள்.

**துலாம்**: விவேகம் - அறிவு சார்ந்த ஆற்றல் நிறைந்த சிறப்புக்கள் நிறையும் நாள்.

**விருச்சிகம்**: செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நாள்.

**தனுசு**: ஆரோக்கியம் - இன்று உங்கள் உடல் நலம் மிகச்சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

**மகரம்**: வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**கும்பம்**: லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**மீனம்**: நற்செய்தி - சிறப்புக்கள் நிறைந்த சுபகாரியங்கள் நிகழும் நன்னாள்.

# தமிழகத்தவர் 100 பேர் கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க அனுமதிக்குக

## மத்திய வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்து

கச்சதீவு,நவ.30

கச்சதீவு அந்தோனியார் ஆலயம் புனரமைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டு திருவிழா நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவில், தமிழகத்தவர்கள் பங்கேற்பதற்கு வழி ஏற்படுத்துமாறு தமிழக மீனவப் பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மீன்வளத் துறை அமைச்சர் டி.ஜெயகுமார் உறுதியளித்துள்ளார்.

தமிழக மீன்வளத் துறை அமைச்சர் ஜெயகுமாரை மீனவப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, தமிழக மீனவர்கள் தரப்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கைக் கடற்படை வசமுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 108 படகுகளை, டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வும், கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் உள்ள 15 மீனவர்களையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்ததாக மீனவப் பிரதிநிதிகள் கூறினர்.

கச்சதீவு அந்தோனியார் புதிய ஆலயத் திறப்பு விழாவில், தமிழர்கள் 100 பேர் பங்கேற்பதற்கான அனுமதி தொடர்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ)

## வல்லப்பட்டைகளைக் கடத்த முயன்ற 2 பேருக்கு அபராதம்

கொழும்பு, நவ.30

இலங்கையிலிருந்து துபாய்க்குச் சட்டவிரோதமான முறையில் வல்லப்பட்டைகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட இருவருக்கு நேற்று முன்தினம் 3 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக, கட்டு நாயக்க விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, தெஹிவளையைச் சேர்ந்த பெண் ஒருவரும் குளியாப்பிட்டியைச் சேர்ந்த ஆண் ஒருவரும் சேர்ந்து நேற்று முன்தினம் காலை துபாய்க்குச் செல்வதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர். இதன்போது அவர்களின் பொதிகளைச் சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது, அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 48 கிலோகிராம் வல்லப்பட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதமும் ஆணுக்கு 2 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு, வல்லப்பட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அதன்பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## துபாயில் கொள்ளை; இலங்கையர் மூவருக்கு சிறை !

கொழும்பு, நவ.30

ஒரு மில்லியன் திர்ஹாம் பெறுமதி மிக்க பொருள்களை விற்பனை செய்த இலங்கையர் ஒருவர் உட்பட 3 பேருக்கு தலா ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அந்த மூவரும், உரிமையாளர் வெளிநாடு சென்றிருந்த போது துபாய் விருந்தகம் ஒன்றில் இருந்து அவற்றை அபகரித்திருந்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவரான இலங்கையர் துபாயில் இருந்து தாய் நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில், அவருக்கான சிறைத் தண்டனை முடிந்தவுடன் நாடு கடத்தப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

எனினும், ஏனைய இருவரும் பெறுமதிமிக்க பொருள்களுடன் நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் முன்னிலையாகாத போதும் நீதிமன்றத்தால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஊழல் முறைப்பாடுகள் காரணமாக சிறைக்காவலர் நியமனங்கள் ரத்து

கொழும்பு, நவ.30

இலஞ்சம் மற்றும் ஊழல்கள் மூலம் சிறைக் காவலர்களின் அண்மைக்கால நியமனங்களுக்கான தெரிவுகள் இடம்பெற்றிருக்கின்றன எனக் கிடைத்துள்ள பல முறைப்பாடுகள் காரணமாக, அந்த நியமனங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படவுள்ளன.

இதற்காகப் புதிதாக நேர்முகத் தேர்வுகள் இடம் பெறவுள்ளன என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

350 சிறைக்காவலர்களைத் தெரிவுசெய்வதற்காக அண்மையில் நேர்முகத்தேர்வு ஒன்று நடைபெற்றது.

எனினும், அந்தத் தேர்வுகளில் இலஞ்சம் மற்றும் ஊழல் இடம் பெற்றுள்ளன என்று அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, அந்தத் தேர்வுகளை முற்றாக ரத்துச் செய்துவிட்டுப் புதிதாக நேர்முகத் தேர்வு ஒன்றை நடத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளோம்.- என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## சட்டவிரோத வெளிநாட்டு மீன்பிடி படகுகளுக்கு 17 கோடி ரூ. அபராதம்

கொழும்பு, நவ.30

இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்கும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு 17 கோடி ரூபா வரையில் அபராதம் விதிக்கப்படும் என்று மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காகப் பிரவேசிக்கும் தென்னிந்திய மீன் பிடிப் படகுகள் உள்ளிட்ட வெளிநாட்டுப் படகுகள் மீது 30 லட்சம் ரூபா முதல் 17 கோடி ரூபா வரையில் அபராதம் விதிக்கப்படவுள்ளது.

இதற்காக நாட்டின் சர்வதேச மீன்பிடிச் சட்டத்தைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டு மீன் பிடிப் படகுகளுக்கு எவ் வித அபராதமும் இதுவரையில் விதிக்கப்படவில்லை.

மீன்பிடிப்படகுகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டு வந்தது.

எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன், அந்தப் படகுகளை விடுவிப்பதற்கு உண்மையான உரிமையாளர்கள் நாட்டுக்கு வர வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்படவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றமையால் உள்நாட்டு மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா, இந்தியா உதவி அவசியம்

## நாடாளுமன்றத்தில் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு, நவ.30

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சீனாவினதும், இந்தியாவினதும் உதவிகள் தேவைப்படுகின்றன என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, எதற்காக அரசு சீனாவை நோக்கித் திரும்பியது என்று சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கேட்கின்றனர்.

பின்னர், நாங்கள் எங்கிருந்து பணத்தைப் பெற முடியும்?

இந்தியாவின் கடனுதவி கிடைக்காது விட்டால், இலங்கை ரயில்வே வலையமைப்பை எவ்வாறு அபிவிருத்தி செய்திருக்க முடியும்.

சில அரசியல்வாதிகளால், சீனாவை நோக்கியோ, இந்தியாவை நோக்கியோ நாம் திரும்பக் கூடாது என்று மக்கள் முன் கூற முடியும். ஆனால் நடைமுறையில் அது சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தல விமான நிலையம் ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு சீன அரசதரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

கடந்த அரசு அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தல விமான நிலையங்களைஅபிவிருத்திசெய்வதற்காக சீன அரசிடம் பெற்ற கடனை அடைப்பதற்காக ஹம்பாந்தோட்டை மற்றும் மத்தல விமான நிலையங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் உரிமை மாற்றம் செய்வதற்கு இலங்கை அரசு ஒப்புதல் அளித்தது.

ஆனால், மத்தல விமான நிலையத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு சீன அரசால் பரிந்துரைக்கப்பட்ட நிபுணர் குழுவினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை நிராகரித்த இலங்கை, இது தொடர்பாக சீன அரசுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ஐ)

## பரிசில் தினம்

நீர்வேலி நவ.30

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசனும், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் உரும்பிராய் கிளை கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் ஏ.கார்த்திகாவும் கலந்து கொள்வர்.

பரிசில்களைத் திருமதி மீனா சித்தார்த்தன் வழங்குவார். (ஐ-32)

## பாடசாலை நுழைவாயில் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர், நவ.30

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் நுழைவாயில் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் வி.விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் வ.குருகுலராசாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சக்தி மேம்பாட்டுக் கழக இயக்குநரின் தாயார் திருமதி நா.பராசக்தியும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)


## மோ.சைக்கிள் விபத்தில் 3 பேர் காயம்

பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் நேற்றுமுன்தினம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மூன்று பேர் படுகாயம் அடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஜெகநாதன் நிருஷன் (வயது-24) கால் பகுதியிலும் அதேயிடத்தைச் சேர்ந்த இரகுநாதன் பலராம் (வயது-25) இரண்டு கைகளிலும் சுப்பர்மடத்தைச் சேர்ந்த இராசேந்திரம் சிந்துஜா (வயது-32) தலையின் பின் பகுதியிலும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் தலையின் பின் பகுதியில் காயமடைந்த இராசேந்திரம் சிந்துஜா மேலதிக சிகிச்சைக்கு நேற்றுக் காலை யாழ். போதன வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-32)

## இரத்ததானம் வழங்கிய படையினர்...



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையுடன் இணைந்து படையினர் இரத்ததான முகாம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள 6 ஆவது சமிக்ஞை படைப்பிரிவைச் சேர்ந்த படையினர் இந்த முகாமில் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர். கட்டளை அதிகாரி லெப்டினன் கேணல் எச்.ஏ.ஜ.யூ.ஹேவாராச்சி தலைமையில் நடைபெற்ற முகாமில் 60 இற்கும் அதிகமான படையினர் கலந்து கொண்டனர். அத்துடன் இரத்தம் வழங்கிய இராணுவத்தினருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (ஐ-9)

## பருத்தித்துறை உணவகங்களில் திடீர் சோதனை

வடமராட்சி, நவ.30

உணவு வாரத்தையொட்டி பருத்தித்துறை நகரத்தில் உள்ள உணவகங்கள் மீது சுகாதாரப் பிரிவினர் அண்மையில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சில உணவகங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். செந்தூரன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டது.

காலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்த உணவக உரிமையாளர்கள் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-30)

## உள்ளக தொலைபேசி இணைப்புகள் திருத்தம்

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை 'கிளினிக்' பிரிவில் செயல் இழந்திருந்த உள்ளகத் தொலைபேசி இணைப்புக்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள 6 தொலைபேசி உள்ளக இணைப்புக்களில் 5 தொலைபேசி உள்ளக இணைப்புக்கள் பல மாதங்களாக பழுதடைந்து செயல் இழந்து இருந்தன. இதனால் 'கிளினிக்' பிரிவில் சிகிச்சை அளிக்கும் வைத்தியர்களும் பணியாளர்களும் வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகளுடன் அவசர அலுவல்களுக்கு தொடர்பு கொள்ள முடியாத நிலை இருந்தது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் பழுதடைந்த தொலைபேசி உள்ளக இணைப்புக்கள் பொருத்தப்பட்டு தொலைபேசி உள்ள இணைப்புக்கள் இயங்க வைக்கப்பட்டுள்ளன. அதனால் தொடர்பாடல் பிரச்சினை தீர்ந்துள்ளது. (இ-30)

## ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸில் முதல் விமானியாக தமிழன்

*கொழும்பு,நவ.30*

*ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முதல்விமானி பதவி யாழ்ப்பாண தமிழன் ஒருவருக்குக் கிடைத்துள்ளது.*

*இந்த விடயம் தொடர்பாக அந்த விமானியான தயாளன் தெரிவித்தவை வருமாறு:-*

*கடும் போட்டிகளுக்கு மத்தியில் பல வருடங்கள் தொடர்ந்தும் மேற்கொண்ட கடும் உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக, எனது இலக்கும் கனவும் உண்மையாக மாறியதையிட்டு நான் உண்மையில் மகிழ்ச்சியடைகின்றேன்.*



*ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் எயார்பஸ் ஏ 320 விமானத்தின் முதல் விமானி பதவி எனக்குக் கிடைத்துள்ளது.*

*இலங்கையின் தேசிய கொடியை நாடுகளுக்கு எடுத்துச் செல்லும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் ஒரே யாழ்ப்பாண தமிழன் என்ற வகையில் எனக்கு புதுமையான மகிழ்ச்சி ஏற்படுகிறது.*

*எனது இந்தப் பயணத்துக்கு எனக்கு ஆதரவு வழங்கிய எனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நீண்டகாலத்துக்கு பின்னர் உங்களில் பலரை நான் விரைவில் வானில் சந்திப்பேன் என்று நம்புகிறேன் என தயாளன் குறிப்பிட்டுள்ளார்.* (ஐ)

## கொக்குவில் இந்து தரம் 5 மாணவர் கௌரவிப்பு விழா

கொக்குவில், நவ.30

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் ஐந்து மாணவர்களைக் கௌரவிக்கும் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாலதி சுப்பிரமணியம் அரங்கில் பாடசாலை அதிபர் பேரம்பலம் தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பாடசாலையின் பழைய மாணவியும், வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலாளருமான திருமதி.கி.செந்தூரனும், பாடசாலையின் பழைய மாணவியும் சட்டத்தரணியுமான செல்வி.ஞானலோஜினி சிவஞானமும் கலந்து கொள்வர்.

நிகழ்வுவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

## அல்கொய்தாவுடன் தொடர்புடைய மூவர் மதுரையில் கைது

மதுரை, நவ.30


அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மதுரையில் 3 பேர் கைது செய்யுப்பட்டனர்.

பொலிஸார் மற்றும் தேசிய புலனாய்வுத்துறை அதிகாரிகள் இணைந்து அவர்களைக் கைது செய்திருந்தனர். அவர்களிடம் இருந்து பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் அவர்கள் அளித்த தகவலின்படி, ஹக்கீம் மற்றும் தாவூத் சுலைமான் என்பவர்களைத் தேடிவந்துள்ளனர். இதில் தாவூத் சுலைமான் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை கிண்டியில் உள்ள தேசிய புலனாய்வுத்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள தாவூத் சுலைமான் தொழில்நுட்ப ஊழியர் என்றும் கூறப்படுகிறது. (எ)

# உலகின் மிக உயரமான வழிபாட்டிடம் டில்லியில்



டில்லி, நவ.30

உலகின் மிக உயரமான மத வழிபாட்டிடம் ஒன்றை அமைக்கும் பணியை இந்தியா ஆரம்பித்துள்ளது.

டில்லியிலிருந்து தென் கிழக்கே 140 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் விருந்தாவனில், இதனை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக்கோயில் 5.5 ஏக்கர் பரப்பளவில் 700 அடி (213 மீ.) உயரத்தில் அமையவுள்ளது. விருந்தாவன் சந்திரோதயக் கோயில் என்று கருதப்படும் இந்தக் கோயில் உலகின் மிக உயர்ந்த இந்துக் கோயிலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

வத்திக்கானில் இருக்கும் செயிண்ட் பீட்டர்ஸ் பெசிலிக்கா மற்றும் எகிப்தில் இருக்கும் பிரமிட்டைக் காட்டிலும் இது பெரியதாக அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் மிகப் பிரபலமான முக்கிய கட்டடங்களான மலேசியாவின் பெட்ரோனாஸ் டவர், தாய்வானின் தாய்பேய் 101 கட்டடம், மற்றும் தற்போதைய உலகின் மிக உயரமான கட்டடமாக இருக்கும் சவூதி அரேபியாவின் ஜெட்டா டவர் கட்டடம் உள்ளிட்ட பலவற்றுக்கு கட்டமைப்புப் பொறியியலாளராகச் செயலாற்றிய தார்டன் டொமாசெட்டி உட்பட உலகின் பல முன்னணி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் இந்தக் கட்டடம் தொடர்பில் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

ஒரு மீற்றர் விட்டமும் 55 மீற்றர் ஆழமும் கொண்ட 500 தூண்கள் இந்தக் கட்டடத்தில் அமைய உள்ளன.

மேலும் இந்தக் கோயிலைச் சுற்றி பொழுது போக்குப் பூங்காக்கள், யமுனை நதியில் படகுச் சவாரி செய்வதற்கான நீர்ப்பாதைகள் மற்றும் கிருஷ்ணர் தொடர்பான கண்காட்சி ஆகியவை அமைய உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோயில் 45 லட்சம் க்யூபிக் அடி சிமெந்து, 19 ஆயிரம் தொன் வலுவான இரும்பு மற்றும் 6400 தொன் கட்டமைப்பு இரும்பால் கட்டுமானம் செய்யப்படவுள்ளது.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மின் தூக்கிகளில் ஒலி, ஒளி மற்றும் டியோரம் நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக் கப்பட்டு அதன்மூலம் பார்வையாளர்கள் கட்டடத்தின் உச்சிக்குக் கூட்டிச் செல்லப்படுவார்கள்.

எனவே பார்வையாளர்கள் 700 அடி நீளத்திலிருந்து காட்சிகளைக் காணலாம். இந்தக் கோயிலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் அடிப்படையில் கட்டடத்தைத் தரம் பிரிக்கும் எல். ஈ.ஈ.டி மதிப்பீடு பெறும் வகையில் கட்டமைக்கப்படவுள்ளது. ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் (இஸ்கான்) பெங்களூர் கிளையின் உறுப்பினர்கள் யோசனையில் இந்தக் கோயில் உருவாகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## மோடி பதவி விலகக் கோரி கேரள முதியவர் நூதனப்போர்



கேரளா, நவ.30

இந்தியப் பிரதமர் மோடி பதவி விலக வேண்டும் என்று கேரளாவிலுள்ள முதியவர் ஒருவர் நூதனப் போராட்டம் நடத்தியுள்ளார்.

70 வயதான யாஹியா என்ற முதியவர் கேரளாவில் உணவகம் ஒன்றை நடத்தி வருகின்றார். இந்த நிலையில் கேரள பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஷ்ரப் கடக்கால் என்பவர் யாஹியா தொடர்பில் முகநூலில் பதிவிட்டுள்ளார். அந்தப்பதிவில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மோடியின் 500 மற்றும் 1000 ரூபா தாள்கள் வாபஸ் விவகாரத்தைத் தொடர்ந்து, இவர் தன்னிடம் இருந்த ரூ.23 ஆயிரம் ரூபா பணத்தை மாற்ற வங்கிக்குச் சென்று, வரிசையில் நின்றுள்ளார். ஆனால், நீரிழிவு நோயாளியான அவரது உடல்நலம், இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் வீடு திரும்பிய அவர் தனது தலைமுடியில் இருந்து அரைவாசி முடியை எடுத்துள்ளார். குறிப்பாக மோடி ஆட்சியில் இருந்து விலகும்வரை இது தொடரும் என்று அவர் சபதம் எடுத்துள்ளார்.

யாஹியா தினசரி நாளிதழ்கள் வாசிக்கும் பழக்கம் உடையவர். தனது வாடிக்கையாளர்களிடம் அன்பு பாராட்டுபவர்.- என்று குறிப்பிட்டுள்ளார்.(எ)

# நாடு முழுவதும் பணத் தட்டுப்பாடு; நீக்க ஆலோசனைக்குழு நியமனம்

அமராவதி, நவ.30

பணத்தட்டுப்பாட்டை நீக்கவும், நிலைமையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவும் மத்திய அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க 5 மாநில முதல்வர்கள் கொண்ட குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு 500, 1000 ரூபா தாள்களை செல்லுபடியாகா என்று அறிவித்ததால் நாடு முழுவதும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. செல்லாத ரூபா தாள்களை மாற்றுவதற்கான காலக்கெடுவும் முடிவடைந்து விட்டது. ஆனாலும் அந்தத் தாள்களை வங்கிகளில் வைப்புச் செய்யலாம். மக்கள் வங்கி மற்றும் ஏ.ரி.எம். களில் பணம் எடுப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கடுமையான பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அறிவிப்பு வெளியாகி 3 வாரங்கள் கடந்த நிலையிலும் நிலைமை இன்னும் சீராகவில்லை. வங்கிகளிலும், ஏ.ரி.எம்.களிலும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கவும், மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரவும் மத்திய அரசுக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்க 5 மாநில முதல்வர்கள் கொண்ட குழுவை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ் விடயம் தொடர்பில் தெரிவித்தார் என்றும், சந்திரபாபு நாயுடுவே இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கும்படி கூறினார் என்றும் ஆந்திர முதல்வர் அலுவலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் குழு தொடர்பாக வேறு எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# சட்டச் சிக்கலை நீக்கி ஜல்லிக்கட்டை நடத்துக

## மத்திய அரசுக்கு வாசன் வேண்டுகோள்



சென்னை, நவ.30

கொள்கை முடிவுகளை உடனடியாக நடைமுறைப் படுத்தி ஜல்லிக்கட்டு நடத்துவதில் உள்ள சட்டச் சிக்கலை நீக்க வேண்டும், என்று மத்திய அரசுக்கு ஜி.கே.வாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர்கள் கூட்டம் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்துக்கு கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் தலைமை தாங்கினார். இந்தக் கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சிப் பணிகள், தேர்தல் முன்னோட்டப் பணிகள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வாசன் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

பணத்தட்டுப்பாடு காரணமாக மக்கள் தினமும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சரியான திட்டமிடல் இல்லாமல், எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அவசர கோலத்தில் மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. கறுப்பு-கள்ள பணத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் அதேநேரத்தில் சாமானிய மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்கமுடியாது. அதேபோல தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான, குறிப்பாக தென்மாவட்ட மக்கள் முக்கிய விழாவாகவே பார்க்கும் ஜல்லிக்கட்டு நடத்துவதில் சட்டச்சிக்கல் உள்ளது என்று மத்திய அரசு கூறிவருகிறது. முறையான கொள்கை முடிவுகள் எடுத்து, அதை நடைமுறைப் படுத்தினால் ஜல்லிக்கட்டுக்கு எந்த விதத்திலும் நீதிமன்றம் தடை வழங்காது.

எனவே அப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை உடனடியாக நடைமுறைப் படுத்தி ஜல்லிக்கட்டு நடத்துவதில் உள்ள சட்டச் சிக்கலை மத்திய அரசு நீக்கவேண்டும். அடுத்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்- என்றார். (எ)

# ஜம்மு காஷ்மீர் பகுதியில் தற்கொலைத் தாக்குதல்!



காஷ்மீர், நவ.30

இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் பகுதியில் உள்ள நக்ரோடா பகுதியில் உள்ள இந்திய இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை தற்கொலைப் படைக்குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அந்தத் தற்கொலைப் படையினருக்கும் இந்திய அரச படைகளுக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம்பெற்றன என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மோதலில் ஓர் இளநிலை அதிகாரி உட்பட இரண்டு படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து காஷ்மீர் நெடுஞ்சாலையில் உயர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்றும் நக்ரோடா பகுதியில் உள்ள பாடசாலைகளை மூடுமாறும் துணை ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இன்று வாக்கெடுப்பு

வொஷிங்டன், நவ.30

வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை விதிப்பது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

ஆசிய நாடுகளில் ஒன்றான வடகொரியா அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு, அணு ஆயுதங்களை நீண்ட தூரம் சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள் ஆகியவற்றை அவ்வப்போது சோதனை நடத்தி வருகிறது.

இறுதியாகக் கடந்த செப்ரெம்பர் 9 ஆம் திகதி வடகொரியா மிகப் பெரிய அணு ஆயுத சோதனை ஒன்றை நடத்தியது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கட்டுப்பாட்டை மீறி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் அன் செயற்படுவதால் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் எதிர்ப்பையும் அவர் சந்தித்து வருகிறார்.

இந்தநிலையில், வடகொரியா மீது புதிய பொருளாதாரத் தடை விதிப்பது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் மீது இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, சீனா, பிரிட்டன், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய 5 நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் உள்ளது.

பாதுகாப்புச் சபையில் உள்ள 15 நாடுகளுக்கும் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடகொரியா மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தென்கொரிய ஜனாதிபதி பதவி விலகத் தயார் !



சியோல், நவ.30

தென்கொரிய நாட்டு ஜனாதிபதி பார்க் ஹியூன் ஹே தனது தோழியுடன் இணைந்து மாபெரும் ஊழலில் ஈடுபட்டார் என்று எழுந்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்து தனது பதவியை ராஜினாமாச் செய்யத்தயார் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தோழியான சோய் ஸூன் சில் என்பவருடன் இணைந்து ஜனாதிபதி பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு வெளியிடப்பட்டது.

நாடு முழுவதும் உள்ள முக்கிய நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக பெரும் தொகையைப் பெற்றிருந்தார் என்றும், இதற்கு ஜனாதிபதியும் உடந்தையாக இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இவ்விவகாரங்கள் தொடர்பான விசாரணையிலும் இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று நாடுமுழுவதும் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் தோழி கைது செய்யப்பட்டு தற்போது பொலிஸாரின் விசாரணை வட்டத்தில் உள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதுபோன்ற ஒரு சூழலில் நாடாளுமன்றத்தின் முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன். பதவி விலக வேண்டும் என்பது தான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணம் என்றால் அதற்கும் நான் தயார் என தென்கொரிய ஜனாதிபதி அறிவித்துள்ளார். (எ)

## இந்தியாவுடன் பேசத் தயார் அறிவித்தது பாகிஸ்தான்



இஸ்லாமாபாத், நவ.30

இந்தியா-பாகிஸ்தான் பேச்சுக்கு இந்தியா முயன்றால் அதை பாகிஸ்தான் சாதகமானதாக பரிசீலனை செய்யும் என்று அந்த நாட்டுக்கான தூதர் அப்துல் பாசித் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் உரி, சர்ஜிக்கல் தாக்குதல்களைத் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

அத்துமீறல்களில் ஈடுபடுவதாக இருநாட்டு இராணுவ வீரர்களும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்குத் தயார் என்று பாகிஸ்தான் கடந்தவாரம் வலியுறுத்தி இருந்தது.

மேலும், பேச்சுக்குத் தயார், ஆனால் காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் கண்டிப்பாக விவாதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் நிபந்தனை விதித்தது.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கு இடையிலான பேச்சுக்கு இந்தியா முயன்றால் பாகிஸ்தான் அதனைச் சாதகமானதாக பரிசீலிக்கும் என்று அந்த நாட்டுக்கான தூதர் அப்துல் பாசித் தெரிவித்துள்ளார். (எ)




கியூபாவின் முன்னாள் ஜனாதிபதியான பிடல் காஸ்ட்ரோவின் அஸ்திக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்திவருகின்றனர். கியூபா புரட்சியின் தந்தையான பிடல் காஸ்ட்ரோ கடந்த சனிக்கிழமை தனது 90 ஆவது வயதில் காலமானார். பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்வின் ஆரம்ப அம்சமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இராணுவ மரியாதையுடன் ஹவானா மற்றும் சான்டியாகோவில் பேரணிகள் ஆரம்பமாகின. மூன்று நாள்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என கியூபா நேற்று அறிவித்திருந்தது.

## அமெ.பல்கலை தாக்குதல்தாரி சுட்டுக்கொலை

வொஷிங்டன், நவ.30

அமெரிக்க பல்கலைக் கழக மாணவர்கள் 11 பேரைக் கொலை செய்த சோமாலியா மாணவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்துல் ரசாக் அலி அர்த்தான் என்ற 18 வயதான அந்த அகதி, தமது வாகனத்தை பல்கலைக் கழகத்தின் பாதசாரி களது பாதையில் செலுத்தி மாணவர்களை மோதச் செய்தார்.

பின்னர், வாகனத்தில் இருந்து இறங்கி அங்கிருந்த மாணவர்கள் மீது துப்பாக்கித் தாக்குதலை நடத்தியுள்ளார். இந்தத் தாக்குதலில் 11 பேர் காயமடைந்தனர்.

இதனை அடுத்து பொலிஸார் அவரைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தீவிரவாதத்துடன் தொடர்புடையதா? என்ற அடிப்படையில் விசாரணை நடத்தப்படுகிறது. (எ)

## 113 வருடங்களின் பின் ஆஸி.பெண் சாதனை



கான்பரா, நவ.30

ஆஸ்திரேலியாவில் 113 ஆண்டுகளுக்கு பின்னர் பெண் ஒருவர் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் 2007 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட சூசன் கியிஃபெல் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

62 வயதுடைய சூசன் கியிஃபெல், எதிர்வரும் ஜனவரி முதல் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக கடமையாற்றுவார் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் மால்கம் டர்ன்புல் அறிவித்துள்ளார்.

சூசன் 15 வயதிலேயே உயர் கல்வியை முடித்துக்கொண்டவர்.

இதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் சூசன் கியிஃபெல்லே முதலாவது பெண் தலைமை நீதிபதி என்று ஆஸ்திரேலியாவின் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும்,1993 ஆம் ஆண்டு குயின்ஸ்லாந்து உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதலாவது பெண்ணும் சூசன் கியிஃபெல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மிகச் சிறந்த நீதித்துறை அதிகாரிகளில் ஒருவராகவும் சூசன் கியிஃபெல் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு பிடிவிறாந்து



இஸ்லாமாபாத், நவ.30

பலுசிஸ்தானின் முக்கிய அரசியல் தலைவர் கொலை வழக்கில் நேரில் முன்னிலையாகாத அந்த நாட்டு முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு உயர் நீதிமன்றம் பிடி விறாந்து பிறப்பித்துள்ளது.

பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப், 2008 ஆம் ஆண்டு பதவி விலகியதுடன் தானாக நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது அவர் துபாயில் வசிக்கிறார். 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த போது, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள பலுசிஸ்தானின் பலுஜ் தேசியக் கட்சித் தலைவர் நவாப் அக்பர்கான் பக்டி, மாகாண சுயாட்சி கோரி தனது ஆதரவாளர்களுடன் போராட்டம் நடத்தினார். அப்போது முஷாரப் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் நவாப் அக்பர்கான் பக்டி கொல்லப்பட்டார்.

இந்த வழக்கு பலுசிஸ்தான் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. முஷாரப்புக்கு பல முறை அழைப்பாணை அனுப்பியும் நேரில் முன்னிலையாகவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காக நேரில் முன்னிலையாவதில் விலக்குக் கோரி கடந்த மார்ச் மாதம் முஷாரப் சட்டத்தரணி தாக்கல் செய்திருந்த மனு மீது நேற்று நடைபெற்ற விசாரணையில் வழக்கை விசாரித்த நீதிபதிகள் முஷாரப்புக்கு பிடி விறாந்து பிறப்பித்து உத்தரவிட்டனர். (எ)

# தமது ஊடகவியலாளர்கள் இறந்தாலும் மரண அறிவித்தலுக்கு கட்டணம் அறவீடு!

## இந்த நிலையில் தான் யாழ்ப்பாண ஊடகங்கள் என்று சீறுகிறார் டக்ளஸ் தேவானந்தா



வடக்கில் செயற்பட்டு வரும் சில ஊடகநிறுவனங்கள், அங்கு ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டால் அல்லது இறக்க நேரிட்டால் அவர்களுக்கு எந்தவித கொடுப்பனவையும் வழங்குவதில்லை. ஊடகவியலாளர்களின் மரண அறிவித்தலைப் பிரசுரிப்பதற்கும் கூட, அவர்களின்குடும்பத்தினிடம்இருந்து பணத்தை அறவிடவும் தவறுவதில்லை.

ஊடகப் போராளிகள் எனத் தங்களைக் கூறிக் கொண்டு வடக்கில் இயங்கி வரும் அவர்களின் நிறுவனங்கள், ஊடகவியலாளரின் குடும்ப பொருளாதார நிலையைக் கருத்தில் எடுக்காமல் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன. இது கவலை தரும் விடயமாகும்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகமுமானடக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில்தெரிவித்தார்.

ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையிலேதொடர்ந்து ஒரு சர்ச்சைக்குரிய துறையாகவே எமது ஊடகத்துறை இருந்து வருவதையே காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் எமது ஊடகத் துறை, அதனது அடிப்படைப் பண்புகளை இழந்து நிற்கின்றதாகவும், அதற்குரிய சுதந்திரத்தை அளவுக்கதிகமாக எடுத்துக் கொண்டு அனுபவித்து வருகின்றது என்றும் அதன் மீதான எதிர்ப்புக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றவர்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

பக்கச் சார்பு என்ற நிலைக்கு உட்பட்டு, பல ஊடகங்கள் செயற்பட்டு வருவதாகவும் ஒரு விமர்சனம் தொடர்ந்து இங்கே முன் வைக்கப்படுகின்றது. இதற்கு நிறையவே உதாரணங்களையும் பலர் முன் வைத்து வருகின்றமையும் இதே ஊடகங்களே வெளியிட்டும் வருகின்றன.

என்னைப் பொறுத்த வரையில் ஊடகங்கள் பக்கச் சார்பற்ற வகையில் செயற்பட்டு, எமது மக்களுக்கு உடனுக்குடன் உண்மையான செய்திகளை வெளிப்படுத்தி, அம்மக்களை நேர்வழிப்படுத்த வேண்டும் என்பதை நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

தகவல்களை சந்தைப்படுத்துவதன் ஊடாக, அதனது விற்பனைப் பெறுமதியை அதிகரித்துக் கொள்ள முடியும் என்ற நோக்கில் மாத்திரம் செயற்படுகின்ற சில ஊடகங்கள், மக்களை அடிக்கடி ஒருவித பதற்றத்துடனும், குழப்பத்துடனும் வைத்துக் கொள்ளும் நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சில ஊடகங்கள் உறுதிப்படுத்தல்கள் இன்றிய நிலையில், நுகர்வுச் சந்தையை மாத்திரம் கருத்தில் கொண்டு செய்திகளை வெளியிடுவதால் எது உண்மை? எது பொய்? என்பதை அறிய முடியாத நிலையில் எமது மக்கள் கைவிடப்படுகின்றனர்.

இந்த நிலையிலிருந்து விடுபட்டு, மக்களுக்குப் பொறுப்புக் கூறுகின்ற அதி முக்கிய களமாக இந்த ஊடகத்துறை அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தகவல் அறியும் சட்டம் கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது. இது 06 மாத காலத்திற்குள் நடைமுறைக்கு வருமென அப்போது கூறப்பட்டது. எனவே, அதனது தற்போதைய நிலை என்ன என்பதை இங்கு அறிய விரும்புகின்றேன்.

### சுயாதீன ஊடக ஆணைக்குழு

அத்துடன், ஊடகங்களை ஒழுங்கு விதிகளுக்கு உட்படுத்தும் வகையில் சுயாதீன ஊடக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது எனவும், இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் ஊடக அமைச்சர் கூறியுள்ளார் என ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

அந்த ஆணைக்குழு குறித்தும், அதனது செயற்பாடுகள் குறித்தும் அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரம், கடந்த மார்ச் மாதம் தென் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி மேற்கொள்ளப்பட்டிருந்த ஊடகவியலாளர்களது நல்லிணக்க விஜயத்தின் போது, வடக்கில் யுத்தப் பாதிப்புகளுக்கு உள்ளான மூன்று ஊடகவியலாளர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது என்றும் -

இதன்பிரகாரம், மூன்று ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒருவருக்கு தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துத் தரப்படுமென்று கூறப்பட்டு, அவற்றின் பொறுப்பினை தென்பகுதியிலுள்ள மூன்று ஊடக நிறுவனங்கள் பொறுப்பேற்ற நிலையில், ஒரு வீட்டுக்கான அடிக்கல்லும் நடப்பட்டது என்றும் அறிய முடிகின்றது.

அதன் பின்னர், வடக்கு ஊடகவியலாளர்களது தென் பகுதிக் கான விஜயத்தின்போது, இவ் விடயம் குறித்த ஊடக அமைச்சரிடம் கேட்கப்பட்ட போது, அந்த வீடமைப்புப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என விரைவில் அவை உரியவர்களுக்கு கையளிக்கப்படுமென்றும் அவர் கூறியுள்ளார் என ஊடகங்களில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

### ஊடகவியலாளருக்கு வீட்டுத் திட்டம்

எனினும், இதுவரையில் அந்தவீட்டுத்திட்டம்தொடர்பில் எவ்விதமானசாதகமான முன்னெடுப்புகளும் இடம்பெறவில்லை என்றே தெரிய வருகிறது. இந்த ஊடகவியலாளர்கள் மேற்படி வீட்டுத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள காரணத்தால், இவர்களுக்கு வேறு வீட்டுத் திட்டங்கள் கிடைப்பதிலும் தடையேற்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் தற்போதைய உண்மை நிலை பற்றி அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், அதற்குரிய சாதகமான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் இங்கு குறிப்பிட்ட, கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தைப் போன்றே, வடக்கிலுள்ள ஊடகவியலாளர்களுக்கான ஏனைய அரச சலுகைகளின் நிலையும் காணப்படு கின்றன என்பதை இங்கு அவதானத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

அந்த வகையில், தென்பகுதி ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போன்று, எமது வடக்கு மாகாண ஊடகவியலாளர் களுக்கும் மடிக்கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள் போன்ற சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், எமது ஊடகவியலாளர்களது பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, கடன் அடிப் படையில் அன்றி, வரிச்சலுகையுடன் கூடிய மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு ஒரு விஷேட திட்டமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட போன்ற ஊடகவியலாளர்களது கொலைதொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வருவதைப் போன்று, கொல்லப்பட்ட, படுகாயமடைந்த ஏனைய அனைத்து ஊடகவியலாளர்கள் தொடர்பிலும், தாக்குதல்களுக்கு உள்ளான ஊடக நிறுவனங்கள் தொடர்பிலும் உரிய விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகள் இனங்காணப்பட்டு, தண்டிக்கப்பட நடவடிக்கை எடுக்குமாறும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த ஊடகவியலாளர்களது குடும்பங்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய வகையில் ஒரு விஷேட திட்டம் என்ற அடிப்படையில் ஒரு நிதியுதவித் திட்டத்தை முன்னெடுப்பதற்குநடவடிக்கை எடுக்குமாறும், வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களுக் கென ஒரு வீட்டுத்திட்டத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் கயந்த கருணாதிலக்கவிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

### ஊழியர் இறந்தாலும் கொடுப்பனவு இல்லை

குறிப்பாக, வடக்கிலே செயற்பட்டு வருகின்ற சில ஊடக நிறுவனங்கள் அந்த நிறுவனத்தில் தொழில் செய்கின்ற நிலையில் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அல்லது இறக்க நேரிடும் ஊடகவியலாளர்களுக்கென்று எவ்வித கொடுப்பனவுகளையும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்காத ஒரு நிலையே காணப் படுகின்றது. தங்களது ஊடக நிறுவனத்தில் பணிபுரிந்து இறக்கின்ற ஊடகவியலாளர்களது மரண செய்தியைப் பிரசுரிப்பதற்குக் கூட அந்த ஊடகவியலாளரின் குடும்பத்தினிடமிருந்து அவர்களது பொருளாதாரப் பின்னடைவுகளையும் பொருட்படுத்தாது பணம் வாங்கும் நிலையில் ஊடகப் போராளிகள் எனக் கூறப்படுகின்ற சிலரது ஊடக நிறுவனங்கள் வடக்கில் செயற்படுகின்ற நிலையில், பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அந்தக் குடும்பங்கள் பலத்த சிரமங்களை எதிர் கொள்கின்றன.

எனவே, தனியார் ஊடக நிறுவனங்கள் என்ற போதிலும், இவற்றில் பணி புரிகின்ற ஊடகவியலாளர்களது நலன் களைப் பேணத்தக்க சில ஒழுங்கு விதிகளை இந்த நாட்டின் ஊடகத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர்கயந்த கருணாதிலக்க அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரம் மேலுமொரு முக்கிய விடயத்தை இந்தச் சபையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

### அரசுக்கு நன்றி

யுத்தம் காரணமாக உயிரிழந்த உறவுகளுக்கு நினைவேந்தல்களை முன்னெடுப்பதற்காக இந்த அரசு சுதந்திரமாக வழிவிட்டிருப்பது தொடர்பில் எமது மக்கள் சார்பாக எனது நன்றியை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக, பலாலி விமான நிலையம் தொடர்பாக ஒரு விளக்கத்தைக் கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்களிடம் கேட்கலாம் என நினைக்கின்றேன். பலாலி விமான நிலைய விஸ்தரிப்புத் தொடர்பில்பல்வேறு கருத்துகள் பலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஏற்கனவே அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் எமது மக்களுக்குச் சொந்தமான குடியிருப்புக் காணிகள், விவசாயக் காணிகள், மீன்பிடித் துறைமுகங்கள் அடங்கலான வளமான கடற்கரைப் பகுதிகள் என்பன பலாலி விமான நிலையப் பகுதியில் இருக்கின்ற நிலை யில், அவை இதுவரையில் எமது மக்களின் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்படவில்லை.


### பலாலி விமானநிலைய காணி சுவீகரிப்பு

இந்த நிலையில், பலாலி விமான நிலைய விஸ்தரிப்புப் பணிகளுக்காக அந்தக் காணிகள் சுவீகரிக்கப்படுமென முன்பு ஒரு செய்தி வந்திருந்த நிலையில், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டமொன்றின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, பலாலி விமான நிலைய விஸ் தரிப்புக்கு பொது மக்களது காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும், அதற்கென எமது மக்களின் காணிகளில் 600 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படும் என்றும் கடந்த 19ஆம் திகதி ஊடகங்களில் செய்திகள் கூறுகின்றன.

எனவே, இதன் உண்மை நிலை என்ன என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.- என்றார் டக்ளஸ் தேவானந்தா. (இ)

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்: இந்திய அணி அபார வெற்றி



மொகாலி, நவ.30
மொகாலியில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றுள்ளது. இதனால் தொடரில் 2-0 என இந்தியா முன்னிலை வகிக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 283 ஓட்டங்களைச் சேர்த்தது.

அதன்பின் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 417 ஓட்டங்களை குவித்தது.

134 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி ஜோ ரூட் (78), ஹமீத் (59) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 236 ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால், இந்தியாவிற்கு 103 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப் பட்டது.

103 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்குடன் முரளி விஜய் மற்றும் பார்தீவ் பட்டேல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

முரளி விஜய் 7 பந்துகளைச் சந்தித்த நிலையில் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அடுத்து புஜாரா களம் இறங்கினார். இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். குறிப்பாக பார்தீவ் பட்டேல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிக் கொண்டே இருந்தார். அவர் 39 பந்துகளில் 8 பவுண்டரி, 1 சிக்சருடன் அரைச்சதம் அடித்தார். இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 17.2 ஓவரில் 88 ஆக இருக்கும் போது புஜாரா 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரஷித்தின் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து 3 ஆவது விக்கெட்டுக்கு விராட் கோஹ்லி களம் இறங்கினார். 21 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தை பவுண்டரிக்கு தூக்கி இந்திய அணியை வெற்றி பெறவைத்தார் பார்தீவ் பட்டேல். இந்தியா 2 ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பார்தீவ் பட்டேல் 67 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. ஒரு டெஸ்ட் சமநிலையில் முடிந்துள்ளதால், இனிமேல் இந்தியா தொடரை இழக்க வாய்ப்பில்லை.

## பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட்டிலும் நியூஸிலாந்து வெற்றி



ஹமில்டன், நவ.30
நியூஸிலாந்தின் ஹமில்டன் நகரில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 138 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-0 என்ற விகிதத்தில் நியூஸிலாந்து வென்றுள்ளது.

2 ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 368 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. போட்டியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின்போது பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்தது.

5 ஆவது நாளான நேற்று பாகிஸ்தான் அணி 230 ஓட்டங்களுடன் சகல விக்கெட்களையும் இழந்தது.

சமி அஸ்லம் 91 ஓட்டங்களைப் பெற்றார். நியூசிலாந்து பந்துவீச்சாளர்களில் நீல் வாக்னர் 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நியூசிலாந்து 1 ஆவது இன்னிங்ஸில் 271ஓட்டங்களைப் பெற்றது. ஜீட் நவால் 55, பிறட்லி வொட்லிங் 49, கொலின் டி க்ராண்ட் ஹொம் 37 ஓட்டங்களைப் பெற்றனர். சொஹெய்ல் கான் 99 ஓட்டங்களையும் 4 விக்கெட்டுக்களையும் பெற்றார். இம்ரான் கான் 52 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுக்களையும் பெற்றார்.

பாகிஸ்தான் 1 ஆவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. பபார் அஸாம் 90 ஓட்டங்களை ஆட்டம் இழக்காமல் பெற்றார். சார்வ்ராஸ் அஹ்மத் 41, சொஹெய்ல் கான் 37 ஓட்டங்களையும் பெற்றனர். டிம் சௌதி 80 ஓட்டங்களையும் 6 விக்கெட்டுக்களையும் பெற்றார். அதேபோல், நீல் வோர்னர் 59 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் பெற்றார்.

நியூஸிலாந்து அணி தனது 2 ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றது. ரொஸ் டெய்லர் ஆட்டம் இழக்காமல் 102 ஓட்டங்களையும், டொம் லதம் 80, கேன் வில்லியம்சன் 42, கொலின் டி கிராண்ட் ஹொம் 32 ஓட்டங்களையும் பெற்றனர். இம்ரான் கான் 76 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுக்களையும் பெற்றார்.

பாகிஸ்தான் அணி 2 ஆவது இன்னிங்ஸில் 230 ஓட்டங்களைப் பெற்றது.


# ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கபடிச் சுற்றுப் போட்டி; ஐக்கியம் அணியை வீழ்த்தியது சென். தோமஸ் 'ஏ' அணி

பருத்தித்துறை, நவ.30
வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கம் - சுவிஸ் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளி கபடிச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் 'ஏ' பிரிவில் ஐந்து கழகங்களும், 'பி' பிரிவில் ஐந்து கழகங்களுமாக மொத்தம் 10 கழகங்கள் போட்டியிடுகின்றன.

இக் கபடிச் சுற்றுத் தொடரில், நேற்று முன்தினம் மாலை 8.00 மணிக்கு போட்டி ஒன்று இடம்பெற்றது.

இப் போட்டியில் கபடியில் வடக்கின் வல்லவர்கள் என்னும்



பெயரை சூடியுள்ள பருத்தித்துறை-முனை சென். தோமஸ் 'ஏ'அணி, பருத்தித்துறை ஐக்கியம் 'பி'அணியை எதிர்கொண்டது. விறுவிறுப்புக்குப் பஞ்சமே இல்லாமல் ஆரம்பித்த போட்டியில் சென்.தோமஸ் 'ஏ' அணி முயல் வேகத்தில் உடனடியாகவே புள்ளியை பெற்றுப் போட்டியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

இருப்பினும் தமது நிலைமைகளை நன்கறிந்து நிதானத்துடன் ஐக்கியம் 'பி' அணி புள்ளிகளைப் பெறத் தொடங்கியது.

ஐக்கியம் 'பி' அணியை தங்களது அடிக்கடி மாற்றியமைக்கும் விளையாட்டு வியூகங்களினால் முனை சென். தோமஸ் 'ஏ' அணி நிலை குலையவைத்துக் கொண்டே இருந்தது. அதனால் முதல்பாதி ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சென். தோமஸ் 'ஏ' அணி27:11 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலைவகித்தது.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது 60:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென். தோமஸ் 'ஏ' அணி, பருத்தித்துறை ஐக்கியம் 'பி'அணியைத் தோல்வியடையச் செய்தது.


இத் தொடரில் தாம் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்றதனால் 16புள்ளிகளுடன் 'ஏ' பிரிவில் பருத்தித்துறை-முனை சென். தோமஸ் 'ஏ' அணி முன்னிலை வகிக்கின்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென். தோமஸ் 'ஏ' அணியின் விளையாட்டு வீரர் அருண் ராஜன் (நந்தன்) தெரிவு செய்யப்பட்டார்.

# பிரேசில் உதைபந்தாட்ட வீரர்களுடன் சென்ற விமானம் விழுந்து நொருங்கியது








பொகோடா, நவ.30

பிரேசில் உதைபந்தாட்ட வீரர்கள் உட்பட 81 பேருடன் கொலம்பியா சென்ற விமானம் விழுந்து நொருங்கியுள்ளது. இதனால் இந்த விமானத்தில் சென்றவர்கள் இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென்னமெரிக்காவில் உள்ள பொலிவியாவில் இருந்து கொலம்பியாவுக்கு ஒரு பயணிகள் விமானம் புறப்பட்டுச் சென்றுள்ளது. அதில் 81 பேர் பயணம் செய்துள்ளனர். அவர்களில் 72 பேர் பயணிகள். 9 பேர் விமானப் பணியாளர்களாவர்.

இந்த விமானத்தில் பிரேசிலின் சர்பிசியோன்ஸ ரியல் உதைபந்தாட்ட அணியைச் சேர்ந்த வீரர்களும் பயணம் செய்துள்ளனர். அவர்கள் கொலம்பியாவின் மெடெலின் நகரில் நடைபெறும் இறுதிப் போட்டியில் விளையாட புறப்பட்டு சென்றுள்ளனர்.

இந்த விமானம் கொலம்பியாவின் மெடலின் அருகே வந்த போது இரவு 10.15 மணியளவில் மலைப்பகுதியில் விழுந்து நொருங்கியுள்ளது. தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து சென்றுள்ளனர்.

மருத்துவக் குழுக்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போதிய பெட்ரோல் இல்லாததால் விமானம் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது. விபத்து நடந்த போது கொலம்பியாவில் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. எனவே விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

விமானம் நொருங்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த உதைபந்தாட்ட வீரர்கள் உள்ளிட்ட பயணிகள் கதி என்ன என்று உறுதியான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதற்கிடையே இந்த விபத்தில் சிக்கியவர்களில் 10 பேர் காயத்துடன் உயிர் தப்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன . ஆனால் இந்தத் தகவலும் உறுதி செய்யப்பட வில்லை. விமான விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் தென்னமெரிக்க உதைபந்தாட்ட சம்மேளனம் போட்டியை இரத்துச் செய்துள்ளது.

# டேவிஸ் கிண்ணத்தை ஆர்ஜன்டினா சுவீகரித்தது

ஜாக்ரெப், நவ.30

ஆடவருக்கான சர்வதேச டென்னிஸ் அரங்கில் உலகக் கிண்ணப் போட்டியாக வருணிக்கப்படும் டேவிஸ் கிண்ணத்தை ஆர்ஜென்டினா முதல் தடவையாக சுவீகரித்தது.

ஸ்கரிப் டென்னிஸ் அரங்கில் வார இறுதியில் நடைபெற்ற மிகவும் பரபரப்பான இறுதிப் போட்டியின் கடைசி இரண்டு மாற்று ஒற்றையர் போட்டிகளில் குரோஷியாவை வீழ்த்தி 3 - 2 என்ற ஆட்டக் கணக்கில் வெற்றி கொண்டதன் மூலம் ஆர்ஜன்டினா சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

கடந்த வெள்ளியன்று ஆரம்பமான இப் போட்டியில் முதல் நாள் நடைபெற்ற ஒற்றையர் போட்டிகளின் நிறைவில் இரண்டு நாடுகளும் 1-1 என்ற ஆட்டக் கணக்கில் சமநிலையில் இருந்தன.

முதலாவது ஒற்றையர் போட்டியில் குரோஷியாவின் மாரின் சிலிக் 3-2 என்ற செட்கள் (6-3, 7-5, 3-6, 1-6, 6-2) அடிப்படையில் ஆர்ஜன்டினாவின் பெடரிக்கொ டெல்போனிஸை வெற்றிகொண்டார்.

இரண்டாவது ஒற்றையர் போட்டியில் குரோஷியாவின் ஐவோ கார்லோவிக்கை ஆர்ஜென்டீனாவின் யுவான் மார்ட்டின் டெல் போர்ட்ரோ 3-1 என்ற செட்கள் (6-4, 6-7, 6-3, 7-5) அடிப்படையில் வெற்றிபெற்று ஆட்ட நிலையை 1-1 என சமப்படுத்தினார்.




கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரட்டையர் போட்டியில் குரோஷியாவின் மாரின் சிலிக்-லெனார்டோ மேயர் ஜோடியினர் 3 நேர் செட்களில் (7-6, 7-6, 6-3) ஆர்ஜன்டீனாவின் யுவான் மார்ட்டின் டெல் போட்ரோ-லெனார்டோ மேயர் ஜோடியினரை வெற்றிகொண்டு குரோஷியாவை 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் இட்டனர்.

ஆனால் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற மாற்று ஒற்றையர் போட்டிகள் இரண்டிலும் ஆர்ஜென்டீனா வெற்றி பெற்று டேவிஸ் கிண்ணத்தை சுவீகரித்தது.

முதலாவது மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் மாரின் சிலிக்கை 3-2 என்ற செட்கள் அடிப்படையில் (6-7, 2-6, 7-5, 6-4, 6-3) யுவான் மார்ட்டின் டெல் போர்ட்ரோ வெற்றி பெற்றார்.

இரண்டாவது மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் ஐவொ கார்லோவிக்கை 3 நேர் செட்களில் (6-3, 6-4, 6-2) பெடரிக்கோ டெல்போனிஸ் வெற்றிபெற ஆர்ஜென்டீனா சம்பியன் பட்டத்தை முதல் தடவையாக சூடிக்கொண்டது.

## புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 25 தொடக்கம் டிசெம்பர்10ஆம்திகதிவரையும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுத்து அவர்களுக்கு சமத்துவமான ஒரு அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதற்கானதும்அவர்கள்உரிமைகளை மதிக்கும் நாள்களாகவும் திகழும் இந்த நேரத்தில் இவ் விவாதம் பொருத்தமானது.

அரச,தனியார் வேலை வாய்ப்புக்களிலேபெண்களுக்கு 25வீதமான ஆளணிகள் ஒதுக்கப்பட்டு அவை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

பெண்கள் பணி செய்யும் இடங்களில் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்திலே 54,000 குடும்பங்களும்கிழக்கு மாகாணத்திலே 32,000 குடும்பங்களும் பெண் தலைமைத்துவத்தில் உள்ளன என புள்ளி விவரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பலருக்கு காணிகள்சொந்தமாகஇல்லை. இன்னும் சிலருக்கு இருக்கின்ற காணிகளை இராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டித் தம்வசப் படுத்தியுள்ளனர். இக் காணிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவற்றில் அவர்களுக்கு நிரந் தரமான வீடுகளும் அமைத்துக் கொடுக்க மகளிர் சிறுவர் விவ கார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வலி. வடக்கிலே இடம் பெயர்ந்து மல்லாகம் கோணப்புலம் முகாமிலே வசித்த 110 குடும்பங்களுக்கு இராணுவத்தின் பொறியியல் கட்டுமானப் பகுதி ஊடாக மீள்குடியேற்ற அமைச்சு 110 வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளமையை இவ் விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 'நல்லிணக்கபுரம்' எனநாமம்சூட்டப்பட்டு,காணிகள் அற்றவர்களுக்கு கீரிமலை காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக இக்குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியாகவும் தொழிற்சங்க ரீதியாகவும் பெண்களின் பங்களிப்பை அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பெண்களின் குரல் எவ்வாறு நசுக்கப்படுகின்றதோ அதே போல்நசுக்கப்படும் இன்னொரு பகுதியினர் உள்ளனர். 14 வயது வரையானவர்களை நாம் சிறுவர்கள், சிறுமிகள் என அழைக்கின்ற போதும் அவர்களின் குரல்களும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

நாளைய தலைவர்கள் ஆகப் போகும் இன்றைய சிறுவர்களைப் பற்றி கரிசனை கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும். பெண்கள் எப்படி வயது வேறுபாடின்றி பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றார்களோ அதே போல் சிறுவர் சிறுமிகளும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள். உல்லாசப் பயணிகள் செல்லும் இடங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகமாக நடந்துள்ளன.

அத்தோடுபோதைப்பொருள்கள், கைபேசிகள், தொலைக் காட்சிகள் ஊடாகவும் சிறுவர்களின் வாழ்வு அழிக்கப்படுகின்றது. பெரியவர்களோடு சேர்ந்திருந்து சிறுவர்கள் இந்தச் செயற்பாடுகளைச் செய்வதால் வயது வேறுபாடு தகர்க்கப்பட்டு ஒரு சமநிலை பேணப்படுகின்றது. இதனால் சிறுவர்கள், பெரியவர்களோடு இணைந்து தமது நிலையிலிருந்து பிறழ்ந்து விடுகின்றார்கள்.

சிறுவர்களுக்கு பாடசாலைகளிலும் பாதுகாப்பில்லாத நிலைமை காணப்படுகின்றது. ஏன் வீடுகளில் கூடப் பாதுகாப்புடன் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. நெருங்கிய உறவுகளிலேயே இத்தகைய பாலியல் துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன. இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு உடனடியாகவே காலதாமதமின்றி தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். காலதாமதமாகும் தண்டனைகளால் சமுதாயத்தில் அக் குற்றங்கள் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் விடுகின்றன.

பாடசாலை செல்லும் சிறுவர்கள் இன்று பல்வேறு உள நெருக்கீடுகளுக்கு உட்படுகின்றார்கள். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைபெற்றோர்களின் கௌரவப்பரீட்சையாக மாற்றமடைந்து சிறுவர்களை நெருக்கீடுகளுக்கும், உளத்தாக்கத்துக்கும் உட்படுத்துகின்றது.

150 புள்ளிகள் பெறும் ஒரு மாணவன் சராசரியாக 75 புள்ளிகள் ஒரு பாடத்தில் பெறுகின்றான். ஆனால் அம்மாணவன் சித்தியடையவில்லை என்றே சக மாணவரும், பெற்றோரும் கூறுகின்றபோது அம்மாணவன் உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து கற்றலில் சோர்வடைந்து விடுகின்றான். எனவே புலமைப் பரிசில் பரீட்சை தரம் 8 இலோ அல்லது 9 இலோ நடத்தப்பட வேண்டும்.

சிறுவர் உழைப்பிலே இன்று பல பெற்றோர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வியாபார நிலையங்களிலும், வசதி படைத்தவர்களின் வீடுகளிலும், கூலித் தொழிலாளர்களாகவும் சிறுவர்கள் வேலை செய்யும் துன்பகரமான நிகழ்வுகளையும் நாம் காணுகின்றோம். இதனால் கட்டாயக் கல்வியைப் பெற முடியாது பாடசாலையை விட்டு இடை விலகுவது தவிர்க்க முடியாததாகின்றது.

எனவே ஐ.நா. சாசனத்தில் குறிப்பிட்டவாறு 14 வயது வரை சிறுவர்கள் கல்வி கற்பதை கட்டாயப்படுத்துவதுடன் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்குத் தண்டனைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு, மலையகத்திலே பாடசாலைக்குச் செல்லாது நிற்பதற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. இவ்விடங்களில் நிகழ்ந்த போரினாலும், மண் சரிவினாலும் பலர் பெற்றோர்கள் இருவரையும் அல்லது இருவரில் ஒருவரை இழந்து வசிக்கின்றார்கள். மேலும் போர் வடுக்களைச் சுமந்தவர்களாக உள்ளனர்.

கால், கை, கண் என்பவற்றை இழந்தும் குண்டுச்சிதறல்களை அகற்ற முடியாத இடங்களில் சுமந்து கொண்டும் இருக்கின்றார்கள். பல சிறுவர்கள் மன நோய்க்கு உள்ளாகி போர்க்கால சூழ்நிலையிலிருந்து விடுபட முடியாதவர்களாக உள்ளனர். இவர்களோடு மாற்றுத்திறனாளிகளாகவும் சிறுவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எல்லோருக்குமான ஒட்டுமொத்த வைத்திய வசதிகளை வழங்க சிறுவர் வைத்திய சாலைகள் நிறுவப்பட வேண்டும். மாகாணத்துக்கு ஒரு சிறுவர் வைத்தியசாலையாவது நிறுவப்பட வேண்டும்.- என்றார்.

## தாக்கிய கூட்டத்தில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது நடைபெற்று வருகின்றது. மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

நேற்று செவ்வாய்க்கிழமை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

அரச சட்டவாதி நாகலிங்கம் நிசாந்தன் சாட்சியினை நெறிப் படுத்தியிருந்தார்.

சுரேஷ் பிறேமச்சந்திரன் சாட்சியம் அளிக்கையில் –

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிகளின் வாகனத் தொடரணி ஊர்காவற்றுறை நோக்கி புறப்பட்டுச் சென்றது.

நாரந்தனையில் எமது வாகனத்தை மறித்தவர்கள் எங்களைத் தாக்கத் தொடங்கினர். மாவை. சேனாதிராசா, சிவாஜிலிங்கம், ரவிராஜ் மற்றும் என்னுடைய பெயர்களைக் கூறி வெட்டுங்கடா, கொல்லுங்கடா என்று பல குரல்களில் சத்தங்கள் கேட்டன. காப்பாற்றுங்கள் என்றும் பலர் கத்திய சத்தங்கள் கேட்டன.

அப்போது காயமடைந்திருந்த மாவை.சேனாதிராசாவை அவரது மெய்ப் பாதுகாவலர்கள் அழைத்து வந்தார்கள். அப்போது எமது தொடரணியில் நின்ற ரவிராஜின் வாகனத்தில் அவர்களை ஏற்றி யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றோம்.

கேள்வி:– முதலாவது வாகனத் தொடரணிக்கும் உங்கள் வாகனத் தொடரணிக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும்?

பதில்:– 100 மீற்றர் தூரம்.

கேள்வி:– 100 மீற்றர் தூரத்தில். நடந்த சம்பவத்தினை உங்களால் பார்க்கக்கூடியதாக இருந்ததா?

பதில்:– முழு சம்பவத்தையும் பார்க்க முடியாவிட்டாலும் சில சம்பவங்களைப் பார்த்திருந்தேன்.

கேள்வி:– வாகனத் தொடரணியில் வந்தவர்கள் யாராவது இறந்து போனதாக உங்களால் அறியக்கூடியதாக இருந்ததா?

பதில்: இரண்டு பேர் கொல்லப்பட்டனர். அவர்களுடைய மரண சடங்கிலும் பங்குபற்றினேன்.

கேள்வி: உங்கள் தொடரணியில் வந்தவர்களில் 22-25 பேர் வரையில் காயமடைந்திருந்தார்களா?

பதில்: ஆம்.

கேள்வி:– 22 - 25 பேரில் படுகாயமடைந்தவர்கள் யார் எனக் கூறமுடியுமா?

பதில்:- சிவாஜிலிங்கம், மாவை. சேனாதிராசா ஆகியோர் உள்ளாகியிருந்தனர்.

கேள்வி:– வந்தவர்கள் என்ன வாகனத்தில் வந்தார்கள் என்று பார்க்கக் கூடியதாக இருந்ததா?

கேள்வி:– ஹன்றர் வாகனமும் இருந்தது. அதனை விட் வேறு வாகனமும் இருந்தது.

கேள்வி: தாக்க வந்தவர்கள் ஆயுதங்களுடன் தாக்கிய வாகனத்தை உங்களால் காணக் கூடியதாக இருந்ததா?

பதில்:– ஆம்.

கேள்வி:– தாக்கப்பட்ட கூட்டத்தில் யாரையாவது உங்களால் அடையாளம் காட்ட முடியுமா?

பதில்:– நிச்சயமாக தெரியும். ஒருவரை அடையாளம் காட்ட முடியும். மதனராஜா. அவர் பெரிய தடி, பொல்லுகளுடன் நின்றிருந்தார்.

கேள்வி:– எவ்வாறு தெரியும்?

பதில்:– ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியுடன் அந்தக்காலத்தில் இருந்தவர். அதன் பிற்பாடு எனது கட்சியில் இருந்து ஈ.பி.டி.பி. ஆரம்பித்த பின்னர் அங்கு போனவர்.

கேள்வி:- எத்தனை வருடமாக தெரியும்?

பதில்: – 15 வருடமாக தெரியும்.

கேள்வி:–கண்ணால் கண்ட சம்பவத்தில் மதனராஜா என்ன ஆயுதம் வைத்திருந்தார் என காட்டமுடியுமா?

பதில்:– கையில் பெரும் கட்டையுடன் நின்றிருந்தார். தூஷண வார்த்தைகள் பேசி ஆக்ரோசமாக நின்றிருந்தார். அவருடன் நின்றிருந்த ஆட்களும் ஆக்ரோசமாக நின்றிருந்தனர்.

கேள்வி:– மதனராஜாவுடன் எத்தனை பேரை கண்டிருந்தீர்கள்?

புதில்:– 9 தொடக்கம் 10 பேர்.

கேள்வி:– அவரை அடையாளம் காட்டமுடியுமா?

பதில்:–ஆம்.

கேள்வி:– எவ்வளவு நேரம் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பதில்:– 20 நிமிடத்திற்குள், மாவை சேனாதிராசாவை ரவிராஜின் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்றுவிட்டோம். என்னுடன் வந்த 15 பேர் நாரந்தனையில் நின்றார்கள்.

(ம-09)

## புத்தளம்...

(3 ஆம்பக்கத் தொடர்ச்சி)

''எங்களை வீட்டிற்குள் சென்று கதவை மூடிக்கொள்ளச் சொல்லி விட்டு கணவனைக் கூட்டிச்சென்றனர்." – இப்படி புத்தளம் உடப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் தனக்கு நேர்ந்த கதியைச் சொன்னார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை அன்று நாங்கள் இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு நித்திரையில்இருந்தோம்.இரவு11.30மணியளவில்கதவைத்தட்டும்சத்தம் கேட்டது. கதவைத் தட்டும்போது "நாங்கள் பொலிஸ் வந்திருக்கிறோம். கதவைத் திறவுங்கள்." – என்றார்கள். எனது கணவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனார்.

எங்கள் வீட்டைச் சுற்றி இராணுவ உடையுடனும், சிவில் உடையுடனும் சிலர் நிற்பதைக் கண்டோம். எங்களைவீட்டிற்குள் சென்று கதவை மூடிக்கொள்ளும் படியும் அவர்கள் இந்த இடத்திலிருந்து வெளியேறும் வரை உள்ளே இருக்குமாறும் சொன்னார்கள். நாங்கள் வீட்டின் உள்ளே சென்றதும் எனது கணவரைக் கூட்டிக் கொண்டுபோனார்கள். வெள்ளை வான் ஒன்றுதான் எமது வீட்டருகில்நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என்பதை நாங்கள் அவதானித்தோம். அதன் பின் என் கணவர் காணாமல் போனார் – இப்படி புத்தளம் 6ஆவது கொலனிஉடப்பைச்சேர்ந்தமுத்துக்குமாரன் கனகேஸ்வரி அழுதவாறு கூறினார்.

இதேவேளை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றொரு பெண் பின்வருமாறு கூறினார்.:–

"யுத்தத்தினால்பாதிக்கப்பட்டு கடந்த 2006ஆம் ஆண்டு வன்னிக்குச்சென்றோம். அதன் பின்னர் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது எனது மகளைக் கட்டாய ஆள் இணைப்பின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிடித்துக் கொண்டுபோனார்கள். இதற்குப் பிற்பாடு 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் எனது மகளும் வேறு சில பெண்களும் காண்பிக்கப்பட்டனர். அதன் பின்னர் என் மகள் தொடர்பாக எந்தத் தகவலையும் நான் பெற வில்லை. – எனதங்கராசாரஜனி தனது ஆதங்கத்தை வெளிப் படுத்தினார்.

## 2017...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சந்தர்ப்பத்தை தவறவிட முடியாது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோதுநாம்எதிர்பார்க்காத அரசியல்மாற்றம் இந்தநாட்டில் ஏற்பட்டது. அது எங்களுக்கு அதிர்ச்சிதரக்கூடியமாற்றமாகும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இந்த நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் நாம் ஒருவருடகாலமாக பேச்சுநடத்தினோம். அதில் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதைத் தவிர்த்தார்கள். நாங்கள் கோரிக்கைகளை வைத்த போதும் அவர்கள் எந்த விடயத்தையும்முன்வைக்கவும்இல்லை. பதில் தரவும் இல்லை.

இந்த அரசாங்கம் வந்த பின்னர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி நாடாளுமன்றத்தை ஓர் அரசமைப்புச் சபையாக மாற்றியது. அதன் அடிப்படையில் ஒரு நடவடிக்கைக்குழு அமைக்கப்பட்டு பல உப குழுக்கள் அமைக்கப்பட்டன. பல முக்கிய விடயங்கள் உப குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டு அந்த உப குழுக்கள்பலவிடயங்களையும் ஆராய்ந்தது.

மனித உரிமை, நிதி, நீதி, பொதுச் சேவை, மத்திக்கும் பிராந்தியத்துக்கும் உள்ள தொடர்புகள், சட்டம், ஒழுங்கு, அவசரகாலச்சட்ட ஒழுங்கு எனப் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் அறிக்கைகளை நடவடிக்கைக் குழுவுக்குச் சமர்ப்பித்து அந்த அறிக்கைகளைப் பிரதமர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். நடவடிக்கைக்குழு இதுவரையில் 45 தடவைகள் கூடியுள்ளதுடன்பலவிடயங்கள் தொடர்பிலும் பேசியுள்ளது. – எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி, முன்னாள் நகர சபை உறுப்பினர் கே.செல்வராஜா ஆகியோருடன் கிராம மட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (ம)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா) அங்கு வைத்து கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பலப்பிடிய முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படிநீதிவான் உத்தரவிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் விநாயகமூர்த்தி முரளீதரன் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சராக இருந்தவர்.

அப்போது அவருக்கு 9 கோடி ரூபா பெறுமதியான – குண்டு துளைக்காத – சொகுசுவாகனம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தினால்அளிக்கப்பட்டது, என்றும்– அதை அவர் மீள ஒப்படைக்க வில்லைஎன்றும்கூறப்படுகிறது. பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் இருந்து அது அண்மையில் மீட்கப்பட்டது என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த வாகன விடயம் தொடர்பான விசாரணைக்காகவே அவர் நேற்று நிதிமோசடி தொடர்பான பொலிஸ் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# புலிகளுடன் இணைந்து செயற்பட்ட மூவர் புனர்வாழ்வின் பின் விடுதலை

### இவர்களில் ஒருவர் சிங்களவர்



வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருட புனர்வாழ்வுப் பயிற்சியினை நிறைவு செய்த மூவர் நேற்று செவ்வாய்க்கிழமை சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்ட மற்றும் விடுதலைப் புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் அங்கு இடம் பெற்ற கைத்தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்த 15 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அஜித் குமார (மோதரை, கொழும்பு), சிங்கராசா எட்மன் (நிலாவெளி, திருகோணமலை), செல்வரட்ணம் சிறீதரன் (கூமாங்குளம், வவுனியா) ஆகிய மூவரும் புனர்வாழ்வை நிறைவு செய்த நிலையில் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தார். அவரும் ஆறு மாதகால புனர்வாழ்வின் பின்னர் நேற்று சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், பூந்தோட்டம் புனர்வாழ் நிலையப் பணிப்பாளர் எம். ஏ.ஆர். கமில்டோன், நிலையப் பொறுப்பதிகாரி கப்டன் குணசேகர, பின்னாய்வு நிலைய பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அமைச்சின் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், புனர்வாழ்வு பெறுவோரின் பெற்றோர்கள், உறவினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (100)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 2 கோடி ரூபாய் பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக கிட்டத்தட்ட 2 கோடி ரூபா குறைநிரப்புமதிப்பீடு சபைத் தலைவர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## கல்லுண்டாயில் மீட்கப்பட்வர் அடையாளம் காணப்பட்டார்

கல்லுண்டாய் வெளியில் கடந்த 16 ஆம் திகதி வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் துன்னாலை குளத்தடியைச் சேர்ந்த நடராசா சந்திரதாசன் என அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

குறித்த நபர் கடந்த 15 ஆம் திகதி குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார் எனவும் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இவரைக் காணவில்லை என இவரது மனைவி கடந்த 22 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில் வெட்டுக்காயங்களுடன் தங்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபரை அடையாளம் காண உதவுங்கள் என மானிப்பாய் பொலிஸாரால் வெளியிடப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவர் அடையாளம் காணப்பட்டிருக்கிறார். (ம -9 -40)

## புகைக்குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்க முற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு வெலிக்கடை பொலிஸார் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். ஆனால், பொலிஸாரின் கோரிக்கையை மேலதிக நீதிவான் சாந்தன கலங்கசூரிய நிராகரித்திருந்தார். (அதுபற்றி செய்தி 4 ஆம் பக்கத்தில்)

இந்த நிலையில், நேற்றைய தினம் களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து சுமார் மூவாயிரம் வரையான மாணவர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்றனர். இதனால் இராஜகிரியவில் இருந்து பத்தரமுல்லை வரையான நாடாளுமன்ற வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

பேரணியாகச் சென்ற மாணவர்கள் நாடாளுமன்றத்தினுள் செல்வதைத் தடுக்கும் நோக்கில் பொலிஸார் பாரிய தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். மாணவர்கள் தடைகளை நீக்கி நாடாளுமன்றத்தினுள் செல்ல முற்பட்ட வேளை அவர்களை நோக்கி கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன.

ஆனால் அதையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பவுஸர்களில் இருந்து பொலிஸார் மாணவர்களை நோக்கி நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். சம நேரத்தில் கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன.

இந்த தாக்குதல்களால் நிலைகுலைந்த மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இதன்போது 15 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரியவருகின்றது. (ம)

# கிளி. அறிவியல்நகரில் விபத்து பதினான்கு பயணிகள் படுகாயம்





கிளிநொச்சி அறிவியல்நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர். அரச பேருந்து ஒன்றை தனியார் சிற்றூர்தி மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பேருந்தை மல்லாவியில் இருந்து கீரிமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் சிற்றூர்தி முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றது.

தனியார் பேருந்து இ.போ.ச பேருந்து மீது பின்பக்கமாக மோதியது. இதனால் இ.போ.ச பேருந்தின் பின்பக்கமும் தனியார் சிற்றூர்தியின் பின் பக்கமும் சேதமடைந்தன. தனியார் சிற்றூர்தியில் சென்ற 10 ஆண்களும் 4 பெண்களுமாக 14 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர். இதில் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-70)

### 9 ஆம் தரத்துக்கான

# பாலியல் கல்வி பாடப் புத்தகத்தை உடனடியாகத் தடை செய்யுங்கள்!

### நாடாளுமன்றத்தில் காதர் மஸ்தான் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,நவ.30

கல்வி அமைச்சின் பிரசுரிப்பு பிரிவின் தகவலின் படி 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்க தயார் நிலையில் உள்ள பாலியற்கல்வி எனும் நூல் மாணவர்களுக்கு அறிவூட்டுவதை விட பாலியல் துன்புறுத்தலுக்கே வழிவகுப்பதாக உள்ளது.எனவே இப்படியான பாடப்புத்தக வெளியீட்டை உடனடியாக தடை செய்ய வேண்டும்

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நேற்று நாடாளுமன்றத்தில் கோரினார்

மகளிர் ,சிறுவர்,விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலையே அவர் இவ்வாறு கூறினார்.அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

மிக அண்மையில் சில ஐநா அமைப்புக்கள் அரசை வலியுறுத்தியபடி, சிறுவர் திருமணம் மற்றும் பதின்மவயது கருவுறல் எனும் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இலங்கை பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கையின் பல சிறுமிகள் கவனயீனமற்ற குழந்தைப்பருவம் மற்றும் அவர்களது முழுமையான உள்ளார்த்தத்தை அறியாது இன்றும் பாதிப்படைந்துள்ளனர். 2015 இல், இலங்கையில் 12 - 17 வயதுக்குட்பட்ட 20,780 சிறுமிகள் திருமணமுடித்து அல்லது துணையுடன் சேர்ந்து வாழ்கின்றனர் எனப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

குடும்ப சுகாதார பணியகத்துக்கு அமைய, பதிவுசெய்யப்பட்ட அனைத்து கருவுற்ற தாய்மார்களிலும் 5.3 வீதத்தின் பதின்ம வயது பெண்களாவார். அதே போல, இலங்கையில் நான்கு பெண்களில் ஒருவர் தமது 18 வயதை அடைவதற்கு முன்னரே பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுகின்றனர்.

இந்த புள்ளிவிவரங்களின் படி, திருமண வயதை மேலும் அதிகரித்து இந்த சமூகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சாத்தியமற்றது என்பது புலப்படுகின்றது. அதேபோல பாடசாலைக் கல்வியை 18வயது வரை கட்டாயப்படுத்தி இந்தப் பிள்ளைகளுக்கு குடும்பக்கட்டுப்பாட்டு வழிகளைப் போதிப்பது, அல்லது ஆணுறை விநியோகத்தை மேற்கொள்வது இதற்கான பொருத்தமான தீர்வல்ல.

இதன் மூலம் இலங்கையில் சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் மேலும் மோசமடையலாம், ஒழுக்கமற்ற ஒரு பரம்பரை எமது நாட்டிலும் உருவாக்கப்படலாம்.

கல்வி அமைச்சின் பிரசுரிப்புப் பிரிவின் தகவல்களுக்கு அமைய, 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்க தயார் நிலையில் உள்ள பாலியல் கல்வி எனும் நூல் மாணவர் அறிவூட்டலைவிட, குறிப்பாக கலப்புப் பாடசாலைகளில் பெண்பிள்ளைகள் துன்புறுத்தப்படுத்தலுக்கு வழிவகுப்பதாகவே உள்ளது.

அந்தப் புத்தகத்தின் 10, 12 மற்றும் 24 ஆம் பக்க புகைப் படங்களும், உருவப்படங்களும் மிகவும் ஆபாசமான நிலையிலேயே உள்ளன. இந்த வெளியீடு உடனடியாக தடைசெய்யப்பட வேண்டும். இவ்வாறான பாடப் புத்தகங்களை வெளியிடுவதற்கு முன்னர், சமய மற்றும் சமூகத் தலைமைகளுடனான கலந்துரையாடல் மிகவும் அவசியமாகும்.

எனவே பிள்ளைகளை வளமாகவும், ஆண் பெண் உறவை ஒரு புனிதமான விடயமாகவும், முறைகேடான பாலியல் உறவை ஒரு பாவமாகவும் நோக்கும் நாம், எமது சிறுவர்களின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் காட்டும் ஆர்வம் அவர்களது கட்டிளமைப் பருவ உணர்வுகளை முடக்குவதாகவோ அல்லது முறைகேடான கலாசாரச் சீர்கேடுகளைத் தூண்டுவதாகவோ அமையலாகாது. - என்றார். (உ)

## ஒற்றையாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சபை முதல்வரும் நெடுஞ்சாலைகள், உயர் கல்வி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அடிப்படைவாதத்திலிருந்து விடுபட்டு, நடு நிலையாகத் தமிழ்த் தரப்பினர் புதிய அரசமைப்பைத் தயாரிப்பதில் இணைந்துள்ளமை வரவேற்புக்குரியதாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய உத்தேச அரசமைப்பில் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்படும், சமஷ்டிக்கு இடமேயில்லை என்று கடந்த ஒரு வாரத்துக்குள் பலமாகவும், உறுதியாகவும் திட்டவட்டமாகவும் கூறும் நான்காவது அமைச்சர் இவராவர்.

ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டிசில்வா, அஜித் பெரேரா ஆகியோர் இதனை வலியுறுத்தியிருந்தனர். அந்த வகையில் நல்லாட்சி அரசின் மற்றைய பங்காளியான ஐ.தே. கட்சி தரப்பிலிருந்தும் அதன் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரிடமிருந்து இப்போது அத்தகைய அறிவிப்பு வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பில் சமஷ்டிக்கு இடமேயில்லை. ஒற்றையாட்சிக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

1987 இல் மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டபோதும், நாடு பிரிவடையும் - வடக்கு, கிழக்கு இந்தியாவின் மாநிலங்களாக மாறும் - இங்குள்ளவர்கள் வடக்கு, கிழக்குக்குச் செல்ல விசா எடுக்க நேரிடும் என அச்சுறுத்தினார்கள்.

மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவர்கள் கூறிய எவையுமே இன்றுவரை நடக்கவில்லை.

அத்தோடு ஐ.தே.கட்சி , சிறிலங்காசுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் பொது எதிர்க்கட்சி என அனைவரது கருத்துக்களும் பெறப்பட்டே அரசமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே பொய்யான அச்சம் தேவையில்லை. இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி நாட்டைத் தீவைத்துக் கொளுத்தக்கூடாது. அதில் அரசியல் குளிர்காயக்கூடாது.- என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.